වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

ANNUAL REPORT

2019



ශ්‍රී ලංකා නැගෙනහිර විශ්වවිද්‍යාලය

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

EASTERN UNIVERSITY, SRI LANKA

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

வருடாந்த அறிக்கை 2019

தூரநோக்கு

இலங்கையில் உயர் கல்விக்கான சிறந்த மையமாக விளங்குவதே இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தூரநோக்கு ஆகும்.

நோக்கம்

நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் கலாச்சாரத் தேவைகளுக்கு ஏற்றவாறான சேவையினை வழங்குவதற்காக, தொழில் சமூக ஒத்துழைப்புடன் கூடிய உகந்த சூழ்நிலை மூலம் தகுதிவாய்ந்த பட்டதாரிகளை உருவாக்குவதற்கு ஏதுவாக கற்றல், ஆராய்ச்சி மற்றும் அறிவுப் பரம்பலுக்கான வழிவகைகளை இலகுபடுத்துதல்.

இலக்குகள் மற்றும் நோக்கங்கள்

இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகமானது பின்வரும் குறிக்கோள்களுடன் கூடிய இலக்குகளை அடையாளம் கண்டுள்ளது.

திறமையான மற்றும் வேலைவாய்ப்புடைய பட்டதாரிகளை உருவாக்கல்	• தரம் மற்றும் பொருத்தப்பாட்டை மேம்படுத்துவதற்காக பாடத்திட்டங்களை அவ்வப்போது திருத்துதல் • கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டு உத்திகளை மேம்படுத்துதல் • சந்தைத் தேவை மற்றும் எதிர்காலத்தை நோக்கிய அடிப்படையில் புதிய கற்கை நெறிகளை அறிமுகம் செய்தல் • கற்பித்தல் மற்றும் கற்றல் சூழலை மேம்படுத்தல்
ஆராய்ச்சி, புதுமை மற்றும் முதுகலை பயிற்சி என்பவற்றில் சிறப்பான தரத்தை அடைதல	• ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவதற்கான தரத்தினை அடைதல் • ஆராய்ச்சிசார் பட்டக் கற்கைநெறிகளை வலுப்படுத்தல் • ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புக்களில் தொழில்சார் ஒருங்கிணைப்பு மற்றும் வணிகமயமாக்கல் என்பவற்றை மேம்படுத்துதல்
நிறுவன திறன் மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துதல்	• ஊழியர்களின் வலிமை மற்றும் தரத்தை மேம்படுத்துதல் • உட்கட்டடைப்பு வசதிகளைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் • ஆளுமை மற்றும் நிர்வாகத்திறனை மேம்படுத்துதல் • செயல் திறன் மிக்க தர உத்தரவாத அமைப்பினைப் பேணுதல்
சமூக ஈடுபாடு, ஆலோசனை மற்றும் எல்லை கடந்த செயற்பாடுகள் என்பவற்றை மேம்படுத்துதல்	• பரந்த அளவிலான பங்கேற்பு மற்றும் உயர் கல்விக்கான சமனான அணுகல் • சமூக சேவைகள் மற்றும் எல்லை கடந்த செயற்பாட்டுத் திட்டங்களை மேம்படுத்துதல் • ஆலோசனை மற்றும் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல் • தொழில் முனைவு மற்றும் கூட்டாண்மையை ஊக்குவித்தல்

உபவேந்தரின் அறிக்கை



கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் 2019ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் முன்வைக்கின்றேன். இப் பல்கலைக்-கழகமானது ஆறு பீடங்களுடன், திருகோணமலையில் ஓர் வளாகம் மற்றும் அழகியல் கற்கைகளுக்கான ஓர் நிறுவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது. மாணவர்களுக்கு உகந்த சிறந்த கற்றல் சூழலை வழங்குவதில் எமது பல்கலைக்கழகம் தொடர்ந்து முயற்சித்து வருகின்றது, மேலும் சகல உள்வாரிப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் தங்குமிட வசதிகளை வழங்கும் கொள்கையினையும் பின்பற்றி வருகின்றது.

கற்றல், ஆராய்ச்சி, அறிவுப் பரம்பல் மற்றும் சமூக நலன் என்பவற்றில், பல்கலைக்கழகத்தில் நிலவிய உகந்த சூழலின் பங்களிப்பானது கவனிக்கத்தக்க ஒன்றாகும். குறிப்பிட்டுக் கூறுமிடத்து, இலங்கை கிழக்கும் பல்கலைக்கழகம் இணைந்து வெளியிடப்பட்ட இரு ஆராய்சிக் கட்டுரைகளுக்கு ஜனாதிபதி விருது கிடைக்கப்பெற்றது சிறப்பம்சமாகும். மேலும், 2019 ஆம் ஆண்டில் அறிவியல் வலையமைப்பின் (Web of Science) மூலம் (கிளறிவேட் அனலிடிக்ஸ்) (Clarivate Analytics) இனால் சுட்டியிடப்பட்ட ஆய்வுப் பத்திரிக்கைகளில் இருபத்தினான்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள் இலங்கை கிழக்கும் பல்கலைக்கழகத்தின் இணைப்போடு வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கல்வி சார் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, ஒரு முழுமையான பட்டதாரியை வடிவமைக்கும் முகமாக விளையாட்டு, அழகியல், கலாச்சாரம் மற்றும் மத நடவடிக்கைகள் போன்ற இணைந்த மற்றும் மேலதிக நடவடிக்கைகளிலும் மாணவர்கள் ஈடுபடுகின்றனர். எமது பல்கலைக்கழகமானது பல இன, பல மத மாணவர்களின் ஒரு சிறந்த கூட்டினைக் கொண்டுள்ளதனால் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பை அவர்களுக்கு வழங்குகிறது.

2019 ஆம் ஆண்டினை ஆக்கமும் வளமும் கொண்ட ஆண்டாக உருவாக்கியமைக்காக கிழக்குப் பல்கலைக்கழகம் பேரவை, மூதவை, கல்வி சார் சமூகம், நிர்வாக ஊழியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் முதலானோர்க்கு எனது நன்றியைத் தெரிவிப்பதற்கு நான் இவ் வாய்ப்பினைன் பயன்படுத்திக் கொள்கின்றேன்.

பேராசிரியர் எப். சி. றாகல்
உபவேந்தர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பொருளடக்கம்

துாரநோக்கு

நோக்கம்

இலக்குகள் மற்றும் நோக்கங்கள்

உபவேந்தரின் அறிக்கை

1 உபவேந்தரின் செய்தி 1

1.1 மீள்பார்வை 1

அ. பல்கலைக்கழகத்தின் நிருவாகக் கட்டமைப்பு 2

ஆ. பேரவை 3

இ. மூதவை 4

ஈ. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடங்கள் மற்றும் கற்கை நெறிகள்: 7

உ. புதிய பீடம் மற்றும் கற்கைநெறிகள் 10

1.2 2019 இன் சிறப்பம்சங்கள் 10

1.3 தோல்வி மற்றும் நியாயம் 13

1.4 எதிர்காலத் திட்டம் 13

2 வளங்கள் மற்றும் மாணவர்களின் விபரங்கள் : 19

2.1 மாணவர் பரம்பல் 21

அ. உள்நாட்டு மாணவர்களின் விபரங்கள் : 21

ஆ. வெளிநாட்டு மாணவர்களின் விபரங்கள் : 25

இ. பட்டதாரிகளின் வெளியீடு 25

2.2 ஊழியர்களின் வளங்கள் 26

2.3 பீடங்களிலுள்ள கல்விசார் ஊழியர்களின் விபரம் 27

2.4 திணைக்களங்கள் மற்றும் அலகுகளில் பணிபுரியும் கல்விசாரா ஊழியர்கள் 31

2.5 வளங்கள் மற்றும் சேவைகள் தொடர்பான செயல்திறன் குறிகாட்டிகள் 33

அ. பட்டதாரிகளின் திருப்திநிலை ஆய்வு 33

ஆ. பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு 35

3 சாதனைகள் 37

3.1 ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புக்கள் மற்றும் வெளியீடுகள் 37

3.2 2019 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஆய்வுப் பத்திரிக்கைகள் 46

3.3 பெற்றுக் கொண்ட விருதுகள்: 46

அ. 2019 இல் கல்வியியலாளர்களின் சாதனைகள் மற்றும் விருதுகள் 46

ஆ 2019 இல் மாணவர்களின் சாதனைகள் மற்றும் விருதுகள் 47

3.4 நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளின் விபரங்கள்: 48

4 நிதி நிலைமைகள் 53

4.1 2019 மார்கழி 31 ஆம் திகதி கருவூலத்தால் வெளியிடப்பட்ட நிதி நிலை பற்றிய அறிக்கை 53

4.2 மீண்டெழும் செலவீன விபரம் 53
4.3 மூலதனச் செலவு விபரங்கள் 54
அ. செயற்திட்டங்களின் விபரம் (உள்நாட்டு/ வெளிநாட்டு நிதிகள்) 54
ஆ. செயற்திட்டங்களின் செலவு விபரம் (உள்நாட்டு/ வெளிநாட்டு நிதி) 55
4.4 நிதி நிலைமை பற்றிய விபரம் (செலவு) 56
4.5 நிதி நிலைமை பற்றிய விபரம் (பிறப்பிக்கப்பட்ட வருமானம்) 56
4.6 நிதி செயற்றிறன் ஆய்வு - 2019 57
4.7 2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் விபரம் 57
4.8 நிதி அறிக்கைகள் 2018 58
5 கணக்காய்வுக் குழுத் தலைவரின் 2019 ஆம் ஆண்டிற்கான அறிக்கை 81
6 இலங்கையின் கிழக்கு பல்கலைக்கழகத்தினால் அமுல்படுப்பப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்கு அறிக்கை 86
7 இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின், 2019 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 88
8 இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2019 மார்கழி 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் மீது 1978 ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1)ஆம் உப பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் பதிலளிப்பு 95

1 உபவேந்தரின் செய்தி

1.1 மீள்பார்வை

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகமானது 2019 ஆம் ஆண்டிற்கான தனது கல்வி சார் நடவடிக்கைகளை எட்டு பீடங்கள் மற்றும் 37 துறைகளினூடாக தொடர்ந்தும் வழங்கிக் கொண்டு இருக்கிறது.


இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகமானது 1981 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 01ஆம் திகதி, விஞ்ஞானம் பீடம் மற்றும் விவசாய பீடம் என்பவற்றை உள்ளடக்கி மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி என்னும் பெயரில் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் முழுமையான பல்கலைக்கழகமாக 1986 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 01ஆம் திகதி தரமுயர்த்தப்பட்டது. மேலும் கலாச்சார கற்கைகள் பீடம் மற்றும் வர்த்தக முகாமைத்துவ பீடம் என்பன 1988 ஆம் ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. 1991 ஆம் ஆண்டில் கலாசாரக் கற்கைகள் பீடமானது கலை கலாசார பீடம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடமானது 2014 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது பீடமான தொழில்நுட்ப பீடம், 2018 ஆம் ஆண்டு தை மாதம் 18ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகமானது ஆரம்பத்தில் திருகோணமலை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி எனும் பெயருடன் 1993 ஆம் ஆண்டு சித்திரை மாதம் முதல் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்டது. பல்கலைக்கழகக் கல்லூரி முறைமை அகற்றப்பட்டபோது திருகோணமலை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியானது 2001 ஆம் ஆண்டு ஆனி மாதம் 06ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், 2001 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ஆம் திகதி முதல் கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகமாக தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள் பீடம் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடம் ஆகிய இரண்டு பீடங்களுடன் தரம் உயர்த்தப்பட்டது. இதனையடுத்து சித்த வைத்திய பிரிவும் நிறுவப்பட்டது.

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகமானது (சு.வி.அ.க.நி) 2005 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 14ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. இவ்வாறு இணைக்கப்படும் முன்னர் சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரி என்னும் பெயருடன் 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு பிராந்திய விவகாரங்கள் மற்றும் இந்து கலாசார அமைச்சினாலும் அதன் பின்னர் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழும் இயங்கி வந்தது.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசாங்க மற்றும் தனியார் அமைப்புகளின் தேவைகளுக்கு ஏற்றவாறான தகைமை வாய்ந்த பட்டதாரிகளை உருவாக்கும் முகமாக தனது கல்வி நடவடிக்கைகளில் வலுவான கவனம் செலுத்தி வருகின்றது. மேலும் பல்கலைக்கழகத்தில் பல்துறை சார் ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதோடு பங்குதாரர்கள் மற்றும் சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப செயற்பட்டு இப்பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஒற்றுமையில் பெரிதும் பங்களிப்புச் செலுத்தியும் வருகிறது

அ. பல்கலைக்கழகத்தின் நிருவாகக் கட்டமைப்பு



படம் 1 : கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் நிறுவனக்கட்டமைப்பு

ஆ. பேரவை

பல்கலைக்கழகத்தின் பேரவையானது 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 44 இன் படி திருத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பல்கலைக்கழக (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 24ற்கு அமைவாக அமைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பேரவை என்பது பல்கலைக்கழகத்தின் ஆளும் அதிகாரமாகும், துணைவேந்தரைத் தலைவராகவும் பதிவாளரை சபையின் செயலாளராகவும் கொண்டுள்ளது.

பேவையின் பதவிமுறை உறுப்பினர்கள்

பேராசிரியர். டி. ஜெயசிங்கம்	- உபவேந்தர் - தலைவர் (தை 2019 வரை)
பேராசிரியர் எப். சி. றாகல்	- உபவேந்தர் - தலைவர் (மாசி 2019 இல் இருந்து)
வைத்தியக் கலாநிதி. கே. இ. கருணாகரன்	- பிரதி உபவேந்தர் (சித்திரை 2019 வரை)
பேராசிரியர். வி. கனகசிங்கம்	- வளாக முதல்வர், திருகோணமலை வளாகம்
கலாநிதி. பி. சிவராஜா	- பீடாதிபதி / விவசாய பீடம்
திரு. எம். ரவி	- பீடாதிபதி / கலை மற்றும் கலாச்சார பீடம் (கார்த்திகை 2019 வரை)
கலாநிதி. ஜெ. கெணடி	- பீடாதிபதி / கலை மற்றும் கலாச்சார பீடம் (மார்கழி 2019 இல் இருந்து)
திருமதி. வி. ஆர். றாகல்	- பீடாதிபதி / வணிக முகாமைத்துவ பீடம்
வைத்தியக் கலாநிதி. ஏ.என். அருள்பிரகாசம்	- பீடாதிபதி / சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம்
கலாநிதி. (திருமதி) எம். வினோபாபா	- பீடாதிபதி / விஞ்ஞான பீடம் (மாசி 2019 வரை)
கலாநிதி. பி. பிரதீபன்	- பீடாதிபதி / விஞ்ஞான பீடம் (பங்குனி 2019 இல் இருந்து)
கலாநிதி. கே. பிரேமகுமார்	- பதில் பீடாதிபதி / தொழில் நுட்ப பீடம்
திருமதி. கே. சந்திரகுமார்	- பீடாதிபதி / தொடர்பாடல் மற்றும் வியாபாரக் கற்கைகள் பீடம் திருகோணமலை வளாகம்
திரு. எஸ். தட்சணாமூர்த்தி	- பீடாதிபதி / பிரயோக விஞ்ஞான பீடம் திருகோணமலை வளாகம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

திரு. ஏ. ஞானதாசன்
பேராசிரியர் ஆர். சிவகணேசன்
வைத்தியக் கலாநிதி எச். ஆர். தம்பவிட்ட
கலாநிதி எஸ். மௌனகுரு
கலாநிதி. எஸ். எம். குசைன்
திரு. எஸ். சண்முகம்
அருட் தந்தை. நோயல் இம்மானுவல
பேராசிரியர் ஏ. என். எப். பெரெரா
பேராசிரியர் கே. கந்தசாமி
பேராசிரியர் எம். ஏ. எம். நு.ஃமான்
திரு. ஏ. சி. எம். முசில்
திரு. சுனில் சாந்த ரணவீர
திரு. எம். உதயகுமார் - ஆடி 2019 இல் இருந்து

மூதவையினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்

கலாநிதி எம். பக்திநாதன்
பேராசிரியர் எஸ். திருக்கணேஷ்

பேரவையின் செயலாளர்

திரு. ஏ. பகீரதன் - பதில் பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. (ஆனி 2019 வரை)
பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. (ஆடி 2019 இல் இருந்து)

இ. மூதவை

பல்கலைக்கழகத்தின் மூதவையானது 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 46 (2) இன் படி திருத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பல்கலைக்கழக (திருத்தம்) சட்டத்திற்கு அமைவாக அமைக்கப்பட்டுள்ளது. மூதவையானது கல்வியியலாளர்களை உள்ளடக்கிய அமைப்பாகக் காணப்படுவதோடு பதிவாளர் இச்சபையின் செயலாளராகவும் தொழிற்படுவார்.

மூதவையின் உறுப்பினர்கள்

பேராசிரியர். டி. ஜெயசிங்கம்	- உபவேந்தர் - தலைவர் (தை 2019 வரை)
பேராசிரியர் எப். சி. றாகல்	- உபவேந்தர் - தலைவர் (மாசி 2019 இல் இருந்து)
வைத்தியக் கலாநிதி. கே. இ. கருணாகரன்	- பிரதி உபவேந்தர் (சித்திரை 2019 வரை)
பேராசிரியர். வி. கனகசிங்கம்	- வளாக முதல்வர், திருகோணமலைவளாகம்
கலாநிதி. பி. சிவராஜா	- பீடாதிபதி / விவசாய பீடம்
திரு. எம். ரவி	- பீடாதிபதி / கலை மற்றும் கலாச்சார பீடம் (கார்த்திகை 2019 வரை)
கலாநிதி. ஜெ. கெனடி	- பீடாதிபதி / கலை மற்றும் கலாச்சார பீடம் (மார்கழி 2019 இல் இருந்து)
திருமதி. வி. ஆர். றாகல்	- பீடாதிபதி / வணிக முகாமைத்துவ பீடம்
வைத்தியக் கலாநிதி. ஏ .என். அருள்பிரகாசம்	- பீடாதிபதி / சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம்
கலாநிதி. (திருமதி) எம். வினோபாபா	- பீடாதிபதி / விஞ்ஞான பீடம் (மாசி 2019 வரை)
கலாநிதி. பி. பிரதீபன்	- பீடாதிபதி / விஞ்ஞான பீடம் (பங்குனி 2019 இல் இருந்து)
கலாநிதி. கே. பிரேமகுமார்	- பதில் பீடாதிபதி / தொழில் நுட்ப பீடம்
திருமதி. கே. சந்திரகுமார்	- பீடாதிபதி / தொடர்பாடல் மற்றும் வியாபாரக் கற்கைகள் பீடம் திருகோணமலை வளாகம்
திரு. எஸ். தட்சணாமூர்த்தி	- பீடாதிபதி / பிரயோக விஞ்ஞான பீடம் திருகோணமலை வளாகம்
சிரேஸ்ட பேராசிரியை (திருமதி). டி. மகேந்திரன்	- சிரேஸ்ட பேராசிரியர், விவசாய இரசாயனவியல்
சிரேஸ்ட பேராசிரியர் பி. வினோபாபா	- சிரேஸ்ட பேராசிரியர், விலங்கியல்
பேராசிரியர் டி. ஜெயசிங்கம்	- சிரேஸ்ட பேராசிரியர், உயிரியல் (மாசி 2019 இல் இருந்து)
பேராசிரியர் வி. குணரெட்ணம்	- பேராசிரியர், அரசியல் விஞ்ஞானம்
பேராசிரியர் எஸ். திருக்கணேஷ்	- பேராசிரியர், கணிதம்
பேராசிரியர் ஏ. ஜி. ஜோன்பிள்ளை	- பேராசிரியர், கணிதம்
பேராசிரியை (திருமதி.) ரி. எச். சேரன்	- பேராசிரியர், பயிராக்கவியல்
பேராசிரியை (திருமதி). ஏ. முருகதாஸ்	- பேராசிரியர், தழிழ்
பேராசிரியர் எப். சி. றாகல்	- பேராசிரியர், பௌதிகவியல் (தை 2018 வரை)
பேராசிரியர் எஸ். சுதர்சன்	- பேராசிரியர், பயிராக்கவியல்
திரு. டபிள்யூ. ஜே. ஜெயராஜ்	- பதில் நூலகர்
கலாநிதி (திருமதி.) என். ரொட்னி பெனான்டோ	- துறைத் தலைவர் / விவசாய உயிரியல்
திரு. எம். எஸ். எம். நபீஸ்	- துறைத் தலைவர் / மிருகவியல் விஞ்ஞானம் (தை 2019 வரை)
கலாநிதி. எம். பக்திநாதன்	- பதில் துறைத் தலைவர் / மிருகவியல் விஞ்ஞானம் (மாசி 2019 இல் இருந்து)
கலாநிதி. (திருமதி.) கே. டி. ஹரிஸ்	- துறைத் தலைவர் / பயிராக்கவியல் (ஆடி 2019 வரை)
கலாநிதி. டி. கிரிதரன்	- பதில் துறைத் தலைவர் / பயிராக்கவியல் (ஆவணி 2019 இல் இருந்து)
சிரேஸ்ட பேராசிரியை. (திருமதி). டி. மகேந்திரன்	- துறைத் தலைவர் / விவசாய இரசாயனவியல்
திருமதி. டி. கிருபானந்தன்	- துறைத் தலைவர் / விவசாயப் பொருளியல் (ஆடி 2019 வரை)
பேராசிரியை (திருமதி.) ரி. எச். சேரன்	- பதில் துறைத் தலைவர் / விவசாயப் பொருளியல் (ஆவணி முதல் கார்த்திகை 2019 வரை)

திருமதி. டி. கிரிதரன்	- பதில் துறைத் தலைவர் / விவசாயப் பொருளியல் (மார்கழி 2019 இல் இருந்து)
திருமதி. ஆர். பவதாரணி	- துறைத் தலைவர் / விவசாயப் பொறியியல் (பங்குனி 2019 வரை)
திரு. எம். இராஜேந்திரன்	- துறைத் தலைவர் / விவசாயப் பொறியியல் (சித்திரை 2019 இல் இருந்து)
திரு. ஆர். கிருபராஜா	- துறைத் தலைவர் / புவியியல்
திரு. எஸ். சந்திரகுமார்	- துறைத் தலைவர் / நுண்கலை
கலாநிதி. பி. எம். ஹம்துன்	- துறைத் தலைவர் / அராபிக் (ஆடி 2019 வரை)
கலாநிதி. எம். எச். எம். ஜலீல்	- துறைத் தலைவர் / அராபிக் (ஆவணி 2019 இல் இருந்து)
திரு. ஆர். சகாயசீலன்	- துறைத் தலைவர் / ஒப்பீடுச் சமயம் மற்றும் சமூக - நல்லிணக்கம் (ஆடி 2019 வரை)
திரு. கே. மதிசீலன்	- பதில் துறைத் தலைவர் / ஒப்பீடுச் சமயம் மற்றும் சமூக நல்லிணக்கம் (ஆவணி 2019 இல் இருந்து)
கலாநிதி. ஜெ. கெனடி	- துறைத் தலைவர் / மொழிகள் (கார்த்திகை 2019 வரை)
கலாநிதி. எஸ். சத்திரசேகரம்	- துறைத் தலைவர் / மொழிகள் (கார்த்திகை 2019 வரை)
கலாநிதி. ஜி. தில்லைநாதன்	- துறைத் தலைவர் / சமூக விஞ்ஞானம்
தழரு. எஸ். ஜெகன்நாதன்	- துறைத் தலைவர் / தத்துவம் மற்றும் மதிப்பு கற்கைகள்
திரு. எம்.டி.எம். றிஸ்வி	- துறைத் தலைவர் / இஸ்லாமிய கற்கைகள் (ஆடி 2019 வரை)
திரு. ஏ. எல். எம். முஜாஹிட்	- துறைத் தலைவர் / இஸ்லாமிய கற்கைகள் (ஆவணி 2019 இல் இருந்து)
கலாநிதி. (திருமதி.) எஸ். கேசவன்	- துறைத் தலைவர் / இந்து நாகரிகம்
கலாநிதி. சி. அருள்மொழி	- துறைத் தலைவர் / கல்வி மற்றும் குழந்தை பராமரிப்பு
திரு. எஸ். கே. சிவகணேசன்	- துறைத் தலைவர் / வரலாறு
கலாநிதி. எஸ். ஜெயராஜா	- துறைத் தலைவர் / பொருளாதாரம்
திரு. டி. பரந்தாமன்	- துறைத் தலைவர் / வர்த்தகம்
கலாநிதி. அன்ரன் அருள்ராஜ்	- துறைத் தலைவர் / முகாமைத்துவம்
கலாநிதி. பி. பிரதீபன்	- துறைத் தலைவர் / பௌதிகவியல் (மாசி 2019 வரை)
கலாநிதி. பி. றொட்னி பெனாண்டோ	- துறைத் தலைவர் / பௌதிகவியல் (பங்குனி 2019 இல் இருந்து)
கலாநிதி. எம். சிதம்பரேசன்	- துறைத் தலைவர் / இரசாயனவியல்
திருமதி. எஸ். சதானந்தன்	- பதில் துறைத் தலைவர் / கணிதம் (தை 2019 வரை)
திரு. பி. பரமதேவன்	- பதில் துறைத் தலைவர் / கணிதம் (மாசி 2019 இல் இருந்து)
கலாநிதி. டி. மதிவேந்தன்	- துறைத் தலைவர் / தாவரவியல்
சிரேஸ்ட பேராசிரியர். பி. வினோபாபா	- துறைத் தலைவர் / விலங்கியல் (சித்திரை 2019 வரை)
கலாநிதி. (திருமதி.) சி. ஜி. தேவதாசன்	- பதில் துறைத் தலைவர் / விலங்கியல் (வைகாசி முதல் ஆனி 2019 வரை) துறைத் தலைவர் / விலங்கியல் (ஆடி 2019 இல் இருந்து)
கலாநிதி. வி. ஜே. நவீன்ராஜ்	- துறைத் தலைவர் / மொழிகள் மற்றும் தொடர்பாடல் கற்கைகள், திருகோணமலை வளாகம்
திருமதி. எஸ். பிரியதர்சன்	- துறைத் தலைவர் / வணிகம் மற்றும் சந்தைப்படுத்தல் - கற்கைகள், திருகோணமலை வளாகம்
திரு. எம். ரமணன்	- துறைத் தலைவர் / கணனி விஞ்ஞானம், திருகோணமலை வளாகம்
திரு. எஸ். லோகீஸ்வரன்	- துறைத் தலைவர் / பிரயோக விஞ்ஞானம், திருகோணமலை வளாகம்
வைத்தியக் கலாநிதி. எம். திருக்குமார்	- துறைத் தலைவர் / சிகிச்சைகள் விஞ்ஞானம்
திருமதி. என். சதீவ்வரன்	- துறைத் தலைவர் / நோய் தொழிற்பாட்டியல்
வைத்தியக் கலாநிதி. எம். ரேஷினி	- துறைத் தலைவர் / மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி
கலாநிதி. (திருமதி.) ஆர். சஞ்சீவ்	- துறைத் தலைவர் / மனித உயிரியல்
கலாநிதி. கே. அருளானந்தம்	- துறைத் தலைவர் / ஆரம்ப சுகாதார பராமரிப்பு

கலாநிதி. எஸ். சுஜேந்திரன்	- துறைத் தலைவர் / துணை சுகாதார விஞ்ஞானம்
திரு. எம். சுகிர்தரன்	- பதில் துறைத் தலைவர் / உயிர் அமைப்புத் தொழில்நுட்பம் (வைகாசி 2019 இல் இருந்து)
திரு. எஸ். சோதீஸ்வரன்	- பதில் துறைத் தலைவர் / பன்முகக் கற்கைகள் (வைகாசி 2019 இல் இருந்து)
கலாநிதி. (திருமதி.) பி. பிறேமானந்தராஜா	- பிரதிநிதி / விவசாய பீடம்
கலாநிதி. எம். பக்திநாதன்	- பிரதிநிதி / விவசாய பீடம் (பங்குனி 2019 வரை)
கலாநிதி. எம். எம். மௌசூன்	- பிரதிநிதி / விவசாய பீடம் (சித்திரை 2019 இல் - இருந்து) கலாநிதி. டி. பிரபாகரன் பிரதிநிதி / வணிகம் மற்றும் முகாமைத்துவ பீடம்
திரு. எஸ். பாலேந்திரன்	- பிரதிநிதி / வணிகம் மற்றும் முகாமைத்துவ பீடம்
கலாநிதி. (திருமதி.) சி. மகேந்திரநாதன்	- பிரதிநிதி / விஞ்ஞான பீடம்
திரு. பி. பரமதேவன்	- பிரதிநிதி / விஞ்ஞான பீடம் (தை 2019 வரை)
கலாநிதி. பி. இளங்கோ	- பிரதிநிதி / விஞ்ஞான பீடம் (மாசி 2019 இல் இருந்து)
திரு. கே. சத்தியசேகர்	- பிரதிநிதி / கலை மற்றும் கலாச்சார பீடம் (ஆடி 2019 வரை)
கலாநிதி. கே. இராஜேந்திரம்	- பிரதிநிதி / கலை மற்றும் கலாச்சார பீடம் (ஐப்பசி 2019 இல் இருந்து)
அருட்தந்தை. ஏ. ஏ. நவரெட்ணம்	- பிரதிநிதி / கலை மற்றும் கலாச்சார பீடம் (கார்த்திகை 2019 வரை)
கலாநிதி. கே. டி. சுஜேந்திரன்	- பிரதிநிதி / சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானம்
வைத்தியக் கலாநிதி. எம். உமாகாந்	- பிரதிநிதி / சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானம்
திரு. ஏ. எல். எஸ். சாபித்	- இயக்குனர் / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மையம்.
கலாநிதி. ஏ. அன்ரு	- இயக்குனர் / பல்கலைக்கழக வணிக இணைப்பு
கலாநிதி. எஸ். அரசரெட்ணம்	- இயக்குனர் / ஊழியர் அபிவிருத்தி மையம்
கலாநிதி. டி. பிரபாகரன்	- இயக்குனர் / உள்ளகத் தர உத்தரவாத அலகு
கலாநிதி. (திருமதி.) கியூ. வை. சௌந்தரராஜா	- பதில் இயக்குனர் / வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் பயிற்சி மையம்
கலாநிதி. பி. இளங்கோ	- இயக்குனர் / எகெட் செயற்றிட்டம் மற்றும் தொழில் வழிகாட்டல் அலகு
கலாநிதி. ஜெ. கெனடி	- பதில் தலைவர் / ஆங்கில மொழி கற்பித்தல் அலகு (மாசி 2019 வரை)
திரு. கே. ஸ்ரீகருணாகரன்	- தலைவர் / ஆங்கில மொழி கற்பித்தல் அலகு (பங்குனி 2019 இல் இருந்து)
திருமதி. எப். பி. கெனடி	- இயக்குனர் / பாலின சமத்துவம் மற்றும் சமபங்கு அலகு
வைத்தியக் கலாநிதி. (திருமதி). வி. பகீரதன்	- தலைவர் / சித்த வைத்திய அலகு, திருகோணமலை வளாகம். (கார்த்திகை 2019 வரை)
வைத்தியக் கலாநிதி. எஸ். உஷாகாந்தன்	- பதில் தலைவர் / சித்த வைத்திய அலகு, திருகோணமலை வளாகம். (மார்கழி 2019 இல் இருந்து)

மூதவையின் செயலாளர்

திரு. ஏ. பகீரதன் - பதில் பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை (ஆனி 2019 வரை)
பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை (ஆடி 2019 இல் இருந்து)

ஈ. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடங்கள் மற்றும் கற்கை நெறிகள்:

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகமானது தனது பிரதான வளாகத்தில் விவசாயம்; கலை மற்றும் கலாச்சாரம்; வணிகம் மற்றும் முகாமைத்துவம்; சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான; விஞ்ஞானம்; மற்றும் தொழில்நுட்பம் உள்ளடங்கலாக ஆறு பீடங்களையும் திருகோணமலை வளாகத்தில் தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள்; மற்றும் பிரயோக விஞ்ஞானம் உள்ளடங்கலாள இரண்டு பீடங்களையும் கொண்டுள்ளது. மேலும் இப் பல்கலைக்கழகம் இளங்கலைமாணி; முதுகலைமாணி மற்றும் ஆராய்ச்சிப் பட்டங்கள்; டிப்ளோமா; மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளை வழங்கிவருகின்றது. பீடங்களில் அமைந்துள்ள கல்விசார் திணைக்களங்கள் மற்றும் அலகுகள்; மற்றும் அவற்றினூடாக வழங்கப்படும் கற்கைநெறிகளின் விபரங்கள் என்பன பின்வரும் அட்வணையில் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம், பிரதான வளாகம்		
பீடம்	திணைக்களங்கள்	கற்கை நெறிகள்
விவசாயம்	விவசாய உயிரியல்; விவசாய இரசாயனவியல்; விவசாய பொருளியல்; விவசாய பொறியியல்; மிருக விஞ்ஞானம்; பயிராக்கவியல்	கௌரவ விஞ்ஞான இளமானி (விவசாயம்); விஞ்ஞான முதுமானி (விவசாயம்)
கலை மற்றும் கலாச்சாரம்	அரபு; ஒப்பீடுச் சமயம், நுண்கலை; புவியியல்; இந்து நாகரிகம்; வரலாறு; இஸ்லாமிய கற்கைகள்; மொழிகள்; சமூக விஞ்ஞானம்; தத்துவம் மற்றும் மதிப்பு - கற்கை ***அலகுகள்*** கிறிஸ்தவம்; பொருளியல்	கலை இளமானி (பொது); ஒப்பீடுச் சமயத்தில் கௌரவ கலை இளமானி; நாடகம் மற்றும் அரங்கியலில் கௌரவ கலை இளமானி; பொருளாதாரத்தில் கௌரவ கலை இளமானி; நுண்கலையில் கௌரவ கலை இளமானி; புவியியலில் கௌரவ கலை இளமானி; இந்து நாகரிகத்தில் கௌரவ கலை இளமானி; வரலாற்றில் கௌரவ கலை இளமானி; தத்தவவியலில் கௌரவ கலை இளமானி; அரசியல் விஞ்ஞானத்தில் கௌரவ கலை இளமானி; சமூகவியலில் கௌரவ கலை இளமானி; தமிழில் கௌரவ கலை இளமானி; மொழிபெயர்ப்புக் கற்கைகளில் கௌரவ கலை இளமானி; கௌரவ கல்வி இளமானி; கலை முதுமானி *ஆய்வுப் பட்டங்கள்* முதுதத்துவமானி மற்றும் கலாநிதி
வணிகம் மற்றும் முகாமைத்துவம்	வர்த்தகம்; பொருளாதாரம்; முகாமைத்துவம்	வர்த்தக இளமானி (பொது); கணக்கியல் மற்றும் நிதியியலில்,கௌரவ வர்த்தக இளமானி; நிறுவன மேம்பாட்டில் வர்த்தக இளமானி; வணிக பொருளாதாரத்தில் வர்த்தக இளமானி; வணிக முகாமைத்துவ இளமானி (பொது); மனித வள முகாமைத்துவத்தில் கௌரவ வணிக - முகாமைத்துவ இளமானி; சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் கௌரவ வணிக - முகாமைத்துவ இளமானி; முகாமைத்துவ பட்டப் பின்படிப்புக் கற்கை (PGDM), வணிக முகாமைத்துவ முதுமானி மற்றும் பொருளாதார - அபிவிருத்தி முதுமானி
சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான	சிகிச்சைகள் விஞ்ஞானம்; மனித உயிரியல்; மருத்துவக்கல்வி மற்றும் - ஆராய்ச்சி; நோய் தொழிற்பாட்டியல்; ஆரம்ப சுகாதார பராமரிப்பு; துணை சுகாதார - விஞ்ஞானம்	மருத்துவ இளமானி மற்றும் சத்திர -சிகிச்சை இளமானி (MBBS); தாதியியல் விஞ்ஞான இளமானி

விஞ்ஞானம்	தாவரவியல்; இராயனவியல்; கணிதம்; பௌதிகவியல்; விலங்கியல்	விஞ்ஞான இளமானி (பொது); தாவரவியலில் கௌரவ விஞ்ஞான இளமானி; இரசாயனவியலில் கௌரவ விஞ்ஞான இளமானி; கணினி விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமானி; கணிதத்தில் கௌரவ விஞ்ஞான இளமானி; பௌதிகவியலில் கௌரவ விஞ்ஞான இளமானி; விலங்கியலில் கௌரவ விஞ்ஞான இளமானி; கல்வியியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமானி; சுற்றுச்சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமானி *ஆய்வுப் பட்டங்கள்* முதுதத்துவமானி மற்றும் கலாநிதி
தொழில்நுட்பம்	உயிரி அமைப்பு தொழில்நுட்ப ; பன்முகக் கற்கைகள்	விவசாய தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவு திறனில் தொழில்நுட்ப உயிர் அமைப்பு இளமானி

திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை		
பீடம்	திணைக்களங்கள்	கற்கை நெறிகள்
தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள்	வணிக மற்றும் முகாமைத்துவக் கற்கைகள்; மொழிகள் மற்றும் தொடர்பாடல் கற்கைகள்	முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமானி; முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமானி; சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமானி; மனித வள முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமானி; கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான - இளமானி; தகவல் முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமானி; மொழிகளில் கலை இளமானி; தொடர்பாடலில் கலை இளமானி
பிரயோக விஞ்ஞானம்	கணினி விஞ்ஞானம்; பௌதிக விஞ்ஞானம்.	கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமானி (பொது); பிரயோக விஞ்ஞானம் மற்றும் இலத்திரனியலில் விஞ்ஞான இளமானி (பொது); பிரயோக விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமானி; இலத்திரனியலில் கௌரவ விஞ்ஞான இளமானி
	சித்த வைத்திய அலகு	சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை இளமானி

வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் மையம்

இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகமானது வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கான கற்கைகளை 1991 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. விவசாயம், விஞ்ஞானம், மற்றும் வணிக முகாமைத்துவம் ஆகிய பீடங்கள் மாத்திரமே ஆரம்பத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கான (வெ.ப) கற்கைகளை வழங்கிவந்தன. பீடங்களான கலை மற்றும் கலாச்சாரம், சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான என்பன வெ.ப கற்கைகளை 2004 ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்தன. மேலும் திருகோணமலை வளாகத்தில் இவ் வெ.ப கற்கைகள் 2006 ஆம் ஆண்டில் இருந்து வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான வெ.ப கற்கைகள், பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினைப் பெரும்பான்மையான மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதோடு இத்தகைய கற்கைநெறிகள் வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் மையத்தினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவையாவன, பல்கலைகழகத்தின் முதன்மை வளாகத்தில் கலை இளமானி; வணிக நிர்வாக இளமானி; விவசாயத்தில் விஞ்ஞான இளமானி; விஞ்ஞான இளமானி; தாதியியலில் விஞ்ஞான இளமானி; மற்றும் வணிக முகாமைத்துவ இளமானி

என்பனவும் திருகோணமலை வளாகத்தில் முகாமைத்துவ விஞ்ஞான இளமானி மற்றும் தொடர்பாடலில் கலை இளமானி என்பனவும் ஆகும்.

டிப்ளோமா கற்கைகள்

விவசாய பீடமானமானது நிலையான விவசாயத்தில் டிப்ளோமா கற்கைநெறியினை வழங்கிவருகின்றது. இக் கற்கையானது ஒவ்வொரு கிரடிட்டிற்கும் (credit) 15 மணித்தியாலங்கள் வகுப்பறை கற்கை நேரமும் 30 மணித்தியாலங்கள் வெளிக்களப் பயிற்சிக் கற்கை நேரமும் உள்ளடங்கலாக இரு வருடங்கள் கற்கைநெறிக் காலத்தினைக் கொண்டது. மேலும் இது தமிழ்மொழி மூலமான கற்கைநெறியாகும். விஞ்ஞான பீடமானது ஆய்வுகூட தொழில்நுட்பத்தில் டிப்ளோமா கற்கைநெறியை வழங்குவதோடு, இது 18 மாத கால கற்கைக் காலத்தைக் கொண்ட ஆங்கிலமொழி மூலமான கற்கைநெறியாகும்.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மையம் (த.ம.தொ.தொ.மை)

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மையமானது 2003 ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவ் மையம், அனைத்துப் பீடங்களிலும் உள்ள உள்வாரி மற்றும் வெளிவாரிப் பட்டப்படிப்புகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பலதரப்பட்ட கற்கைநெறிகளை கணினி விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் வழங்கி வருகின்றது. இதற்கு மேலதிகமாக, தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் மற்றும் கணினி வன்பொருளில் சான்றிதழ் கற்கை நெறியினை பாடசாலைக் கல்வியினைப் பூர்த்தி செய்தவர்களுக்கும் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் நடாத்திவருகின்றது. பல்கலைக்கழகமானியங்களின் நெறிமுறைகளின் படி இக் கற்கைநெறியானது SLQF L1 (NVQ L3 ற்கு சமனான) தரத்தை கொண்டுள்ளது.

மேலதிகக் கற்கைகள் அலகு

பிரதேச மக்களின் அதிகரித்து வரும் தேவைகளின் நிமித்தம் 1998 ஆம் ஆண்டு மேலதிகக் கற்கைகள் அலகு நிறுவப்பட்டது. இக் கற்கைகளானது பல்கலைக்கழகத்தினால் தொடங்கப்பட்டு பல்கலைக்கழக மூதவையினால் கலை மற்றும் கலாச்சார பீடத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பீடமானது இக்கற்கைளுக்கான அலகினை நிறுவி பின்வரும் கற்கைநெறிகளை முன்னெடுத்து வருகின்றது.

- இதழியலில் சான்றிதழ் கற்கை
- இடர் முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை
- நிறுவன முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை
- உளவியல் மற்றும் ஆளமை அபிவிருத்தியில் சான்றிதழ் கற்கை
- ஆலோசனை வழிகாட்டலில் சான்றிதழ் கற்கை
- தொடர்பாடலுக்கான ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கை

ஒவ்வொரு கற்கைநெறியும் 60 மணிதியாலங்களைக் கொண்ட மூன்று மாத கால கற்கைநெறியாக சிறப்பான ஆசிரியர்களினால் நடாத்தப்படுகின்றது.

உ. புதிய பீடம் மற்றும் கற்கைநெறிகள்

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையானது தற்காலத்திற்கேற்றவாறாக ஆர்வமூட்டும் துறைகளில் புதிய பட்டப் படிப்புகளை அறிமுகம் செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

- தொழில் துறையில் தேவைப்படும் பணிகளுக்கான துறைசார் பட்டதாரிகளை உருவாக்கும் கொள்கையின்படி, தொழில்நுட்ப பீடமானது **தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் இளங்கலை பட்டத்தினையும் இலத்திரனியல் தொழில்நுட்பம் (எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல்) இல் இளங்கலைப் பட்டத்தினையும்** அறிமுகம் செய்வதற்கான பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

- கலை கலாசார பீடமானது புதிதாக முன்மொழிந்துள்ள இந்து நாகரிக பீடத்தின் ஊடாக **இந்து நாகரிகத்தில் இளமாணி** கற்கையை வழங்குவதற்கான பாட நெறியினைத் தயாரித்துள்ளது. மேலும், பீடமானது மொழிபெயர்ப்புக் கற்கைகளில் கௌரவ கலை இளமாணி கற்கையை அறிமுகம் செய்துள்ளது.

- திருகோணமலை வளாகமானது ஒரு புதிய பீடத்தினை ஸ்தாபிப்பதனூடாக **கடல்சார் அறிவியல் / கடல்சார் பொறியியலில்** இளங்கலைப் பட்டப்படிப்புக் கற்கைகளை முன்னெடுப்பதற்கான பணியில் ஈடுபட்டு வருகின்றது. தொடர்பாடல் மற்றும் வணிகக் கற்கைகள் பீடமானது **சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்** பட்டப்படிப்பிற்கான நிகழ்ச்சித்திட்டத்தினை உருவாக்கி வருகின்றது.

1.2 2019 இன் சிறப்பம்சங்கள்



- மெச்சத்தக்க சேவைக்கான விருது வழங்கும் விழா மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்ககான பாராட்டு விழா என்பன 2019 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி நடைபெற்றது.

- 2019 ஆம் ஆண்டிற்கான சிறப்பு பொதுப் பட்டமளிப்புவிழா தை மாதம் 6ஆம் திகதி நடைபெற்றது.



- “நிலையான வேளாண்மைக்கான புத்தாக்கம் மற்றும் கண்டுபிடிப்பு” என்ற தலைப்பில் விவசாயம் குறித்த 2வது ஆராய்ச்சிக் கருத்தரங்கு 2019 ஆம் ஆண்டு தை மாதம் 9 ஆம் திகதி நடைபெற்றது.



- 2019 ஆம் ஆண்டு தை மாதம் 22 ஆம் திகதி இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 9வது உபவேந்தராக பேராசிரியர். எப். சி. றாகல் அவர்கள் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.



- விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த இரு கல்வியியலாளர்களும், சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒரு கல்வியியலாளரும் 2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தமது அறிவியல்சார் வெளியீடுகளிற்காக ஜனாதிபதி விருதினை பெற்றுக் கொண்டனர். இவ் வைபவமானது 2019 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26 ஆம் திகதி கொழும்பிலுள்ள தாஜ் சமுத்திராவில் நடைபெற்றது.

- 2019 ஆம் ஆண்டிற்கான வேலைவாய்ப்புக் கண்காட்சி மற்றும் தொழில் ஊக்கத் திட்டம் பங்குனி மாதம் 4 ஆம் திகதி பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்தப்பட்டது.

- போதை மருந்து இல்லாத நாட்டிற்கான உறுதிமொழியேற்பு விழா 2019 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 3 ஆம் திகதி இடம்பெற்றது.

- 2019 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 9 ஆம் திகதி இலங்கைக்கான பாக்கிஸ்தான் தொழில்நுட்ப உதவித் திட்டத்திற்காக (PTAP) பாக்கிஸ்தானுக்கு விஜயம் செய்த 15 விஞ்ஞானிகள் மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகள் அடங்கிய குழு உறுப்பினர்களில் ஒருவராக எமது துணைவேந்தர் பேராசிரியர். எப். சி. றாகல் அவர்களும் இடம் பெற்றிருந்தார்.



- 2019 ஆம் ஆண்டு ஆணி மாதம் 6 ஆம் திகதி சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் கட்டிட வளாகத்திற்கான அடிக்கல்லை நாட்டும் வைபவத்தில் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் செயலாளரான திரு. எம். எம். பி. கே. மாயதுன்னே அவர்கள் அடிக்கல் இட்டு சிறப்பித்தார்.

- திரு. ஏ. பகிரதன் அவர்கள் 2019 ஆம் ஆண்டு ஆணி மாதம் 24 ஆம் திகதி அன்று எமது பல்கலைக்கழகத்தின் பதிவாளராக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.



- 2019 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆம் திகதி அன்று இலங்கையில் உள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் எமது பல்கலைக்கழகத்திற்கு தனது வருகையினை மேற்கொண்டார்.



இலங்கை கடற்படைக்கும் கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. நீண்டகால logistics முகாமைத்துவ பாடநெறிக்கான வளவாளர்கள் அல்லது விரிவுரையாளர்களைப் பெறும் நோக்கத்திற்காக இவ் ஒப்பந்தம் 2019 ஆம் ஆண்டு ஆடி மாதம் 15 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

- "உருமாற்றத்தின் மூலமான நிலைபேறு" என்ற தலைப்பில் 4வது வருடாந்த ஆராய்ச்சி மாநாடு 'TRInCo 2019' ஆனது திருகோணமலை வளாகத்தில் 2019 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

- தொழில்நுட்ப பீடத்தின் உயிர் அமைப்பு தொழில்நுட்ப கட்டிட தொகுதிக்கான மதரீதியான திறப்பு விழாவானது 2019 ஒக்டோபர் 31ஆம் திகதி நடைபெற்றது.

- பல்கலைக்கழகங்களில் தரமான கலாச்சாரத்தை நிறுவனமயமாக்குதல் மற்றும் உள்ளக தர உத்தரவாத செயற் திட்டத்தின் வளர்ச்சி குறித்த பட்டறை 2019 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெற்றது.

- வணிக முகாமைத்துவ பீடத்தின் வருடாந்த ஆராய்ச்சி அமர்வு "சமூக நல்வாழ்வுக்கான மாறுபட்ட வணிக சித்தாந்தத்தை ஒருங்கிணைத்தல்" என்ற தலைப்பில் 2019 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 29 ஆம் திகதி நடைபெற்றது.

- கலை மற்றும் கலாச்சார பீடத்தின் வருடாந்த ஆராய்ச்சி அமர்வு "உலகமயமாக்கப்பட்ட சூழலில் கலாச்சார தனித்துவத்தைத் தக்கவைத்தல்" என்ற கருப்பொருளின் கீழ் 2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19 ஆம் திகதி நடைபெற்றது.

- அறிவியல் வலை மூலம் (கிளாரிவேட் அனலிடிக்ஸ்) குறியிடப்பட்ட ஆய்வுப் பத்திரிக்கைகளில், 2019 ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இணைப்புடன் இருபத்தினான்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

1.3 தோல்வியும் நியாயமும்

- பெறுபேற்று அடிப்படைக் கல்வி மற்றும் மாணவர் மையக்கற்றல் போன்ற நவீன முறைகளை உள்ளடக்கிய திருத்தங்கள் உள்ளகத் தர நிர்ணயம் மற்றும் பாடத்திட்ட அபிவிருத்திச் செயற்பாடு/மீளாய்வு போன்ற விடயங்கள் பழயை பெருநிறுவனத்திட்டம்/செயற்திட்டத்தில் காணப்படாததால், தாபனத்தின் முயற்சியில் குறைந்தளவு ஆர்வம் காணப்படுகிறது.

- உள்ளூர் தேவைகளை மையமாகக் கொண்ட ஆராய்ச்சி மற்றும் சர்வதேச ரீதியில் குறிப்பிடத்தக்க உயர் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆராய்ச்சி என்பவற்றின் மேம்பாட்டுக்கான ஒருங்கிணைந்த திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை. இவ் இடைவெளியைச் சரி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

- பல்வேறுபட்ட பிரச்சனைகளின் காரணமாக பல்கலைக்கழகமானது அதிகமாக மாணவர்களின் அமைதியின்மைகளை எதிர்கொண்டுள்ளது மற்றும் நிறுவன நிர்வாகத்தில் பங்குதாரர்களின் நம்பிக்கையை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- ஊழியர்களின் பற்றாக்குறை மற்றும் பௌதிக வசதிகளின் வரையறை என்பன தொடர்ச்சியாக எதிர்கொள்ளப்பட்டு வரும் பிரச்சினையாகும். இதன் விளைவாக வருடாந்த நாட்காட்டியில் தாமதங்கள் ஏற்படுகின்றது. தேவையான வளங்கள் தொடர்பாக உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டுள்ளோம்.

1.4 எதிர்காலத் திட்டம்

குறைபாடுகள் மற்றும் இடைவெளிகளைக் கண்டறிவதுடன் உயர் கல்வியின் தற்போதைய போக்குகளை உள்ளடக்கிய ஒரு புதிய மூலோபாயத் திட்டம் 2019 இலிருந்து 2023 வரை உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் கீழே உள்ள அட்டவணையானது அதன் இலக்குகள், குறிக்கோள்கள், உத்திகள் மற்றும் தொடர்புடைய முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் என்பவற்றினை சுருக்கமாகக் காட்டுகின்றது.

இலக்கு 1: ஆற்றல்வாய்ந்த மற்றும் வேலையில் ஈடுபடுத்தக்கூடிய பட்டதாரிகளை உருவாக்கல்					
குறிக்கோள்கள்		உத்திகள்		முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (மு.செ.கு)	
					அடிப்படை†
1.1	தரம் மற்றும் பொருத்தப்பாட்டை மேம்படுத்தும் நோக்கத்துடன் பாடத்திட்டத்தினை அவ்வப்போது திருத்துதல்	1.1.1	பாடத்திட்டத்தில் தற்போதைய போக்குகள் மற்றும் செய்முறைகளை இணைத்துக் கொள்ளல்.	**மு.செ.கு 1 :** வேலை வழங்குனரின் திருப்தி நிலை (பணியாளரின் ஆற்றல், அணுகுமுறை, கண்டுபிடிப்பு போன்றவை) *- (% மதிப்பீடு: மிகத் திருப்தி/ திருப்தி/ சராசரிக்கு மேல் / சராசரி/ குறைவு)*	8/42/28/ 16/6
		1.1.2	விளைவு அடிப்படையிலான கல்வி மற்றும் மாணவர்களை மையமாகக் கொண்ட கற்றல் அணுகுமுறையை உள்வாங்கல்.		
1.2	கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டு உத்திகளை மேம்படுத்துதல்	1.2.1	விளைவு அடிப்படையிலான கல்வி மற்றும் மாணவர்களை மையமாகக் கொண்ட கற்றல் அணுகுமுறைகளை உள்வாங்கல்.	**மு.செ.கு 2 :** தர உத்தரவாத மற்றும் அங்கீகார மன்றினால் நடாத்தப்படும் செயற்திட்ட மதிப்பாய்வில் பொருத்தமான பிரிவில் சித்தி பெறும் கல்வித் திட்டங்களின் எண்ணிக்கை	3
		1.2.2	கற்றல் கற்பித்தல் செற்பாடுகளில் புதுமையான கற்பிக்கும் முறையையும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினையும் அறிமுகப்படுத்த ஊக்கமளித்தல்.		
		1.2.3	பாடத்திட்டத்தில் உள்ளகத் தர உத்தரவாத பொறிமுறையைப் பலப்படுத்தல்.	**மு.செ.கு 3 :** மாணவர்களின் திருப்தி நிலை (கற்பித்தல் தொடர்பாக) *- (% மதிப்பீடு: மிகத் திருப்தி/ திருப்தி/ சராசரிக்கு மேல் / சராசரி/ குறைவு)*	17/60 /12/8/3
1.3	சந்தைத் தேவை மற்றும் எதிர்காலத்தை நோக்கிய அடிப்படையில் புதிய கற்கை நெறிகளை அறிமுகம் செய்தல்.	1.3.1	இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் “கல்வித் திட்ட மேம்பாட்டிற்கான தர உத்தரவாதக் குறியீட்டினை” **சேர்த்துக்கொள்ளல்.**	**மு.செ.கு 4 :** பாரம்பரியமற்ற கற்கை நெறிகளின் எண்ணிக்கை, கேள்விகளுக்கு ஏற்றவாறான பாடத்தெரிவு.	22 / 10 / 68
		1.3.2	புதிய பீடங்கள்/ துறைகளை நிறுவுதல்.	**மு.செ.கு 5 :** தகுந்த வேலைவாய்ப்பு ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான சராசரி காத்திருப்புக் காலம் *(குறித்த மாத காலத்திற்குள் பணியமர்த்தப்பட்டவர்களின் விகிதாசாரம் (< 6/ 6-12/ >12))*	
		1.3.3	உலகளாவிய உயர் கல்வி நிறுவனங்களுடன் கூட்டிணைப்பிற்கான ஊக்குவிப்பு.		
1.4	கற்றல் கற்பித்தல் சூழலை மேம்படுத்தல்	1.4.1	நூலகத்தின் பயன்பாட்டை பொருத்தமான மற்றும் நடைமுறைத் தகவல்களை வழங்கக்கூடியவாறு மேம்படுத்தல்.	**மு.செ.கு 6 :** கல்விசார் செயல்திறன் மற்றும் ஆராய்ச்சிக்குத் தேவையான வசதிகள் மீதான (மாணவர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களின்) திருப்திநிலை மட்டம் *- (% மதிப்பீடு: மிக திருப்தி/ திருப்தி/ சராசரிக்கு மேல் / சராசரி/ குறைவு)*	8/45/26/ 15/6
		1.4.2	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துதல்.		
		1.4.3	ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகப் பயன்படுத்துவதை வலுப்படுத்துதல்		
		1.4.4	மாணவர்களின் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆளுமை விருத்தியை மேம்படுத்துதல்		
		1.4.5	மாணவர் நட்புறவுரீதியான தொகுதியாக நிர்வாகம், கல்வி மற்றும் தொழில்நுட்ப உதவி என்பன அமைந்திருப்பதை உறுதிப்படுத்துதல்		

இலக்கு 2: ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் முதுகலை பயிற்சி என்பவற்றில் சிறப்பான தரத்தை அடைதல்					
குறிக்கோள்கள்		உத்திகள்		முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (மு.செ.கு)	
					அடிப்படை†
2.1	ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் தரத்தினை அடைதல்	2.1.1	ஆராய்ச்சிக்கான உட்கட்டமைப்பு மற்றும் கொள்கைச் சூழலை மேம்படுத்துதல்.	**மு.செ.கு 7 :** வெப் ஒவ் சயன்ஸ் வலை அமைப்பினால் குறியிடப்பட்ட ஆய்வுப் பத்திரிக்கைகளில், ஓராண்டில் வெளியிடப்படும் வெளியீடுகளின் எண்ணிக்கை.	14
		2.1.2	பிராந்திய மற்றும் தேசத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சிகான கல்விமுறைக்கு இடைநிலை ஆராய்ச்சியை ஊக்குவித்தல்	**மு.செ.கு 8 :** ResearchGate எனும் வலைப்பக்கத்தில் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கைக்கான RG மதிப்பெண் *(சக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆய்வுப் பத்திரிக்கைகள் / மாநாட்டு நடவடிக்கைகளில் ஆராய்ச்சி வெளியீடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில்)*	362
		2.1.3	உலகளாவிய முக்கியத்துவம் / தாக்கம் குறித்த புதிய அறிவை உருவாக்கும் ஆராய்ச்சியை ஊக்குவித்தல்.		
		2.1.4	ஆராய்ச்சியின் தரத்தை உறுதி செய்தல்	**மு.செ.கு 9 :** நான்கு (4) அல்லது அதற்கு அதிகமாக கூகிள் *h-*index கொண்டுள்ள கல்வி சார் ஊழியர்களின் எண்ணிக்கை	11
2.2	ஆராய்ச்சிசார் பட்டக் கற்கை நெறிகளை வலுப்படுத்தல்	2.2.1	பட்டப்படிப்பு பீடத்தை நிறுவுதல்	**மு.செ.கு 10 :** வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்புடைய வகையிலான துறைகளில் முதுகலை பட்டப்படிப்புகளின் எண்ணிக்கை (*முதுமானி / முதுதத்துவமானி / கலாநிதி மாணவர்களின் எண்ணிக்கை)*	91 / 10 / 02
		2.2.2	ஆராய்ச்சிக்கான மாணவர்களை இணைத்துக் கொள்வதை ஊக்குவித்தல்.		
		2.2.3	ஆராய்ச்சிப் பட்டங்களுக்கான கூட்டிணைப்பினை ஏற்படுத்தல்	**மு.செ.கு 11 :** தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆராய்ச்சி ஒத்துழைப்புக்களின் எண்ணிக்கை (உள்ளூர் / சர்வதேசம்)	12
2.3	ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் தொழில்சார் ஒருங்கிணைப்பு மற்றும் வணிகமயமாக்கல் என்பவற்றை மேம்படுத்துதல்	2.3.1	தொழில் நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு இடையேயான கூட்டிணைப்பினை மேம்படுத்துதல்.	**மு.செ.கு 12 :** ஆரம்பிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை / வணிகமயமாக்கல்கள் / காப்புரிமைகள்	0 / 0 / 0
		2.3.2	ஆராய்ச்சிகளின் வணிகமயமாக்கல்களை ஊக்குவித்தல்.		

இலக்கு 3: நிறுவன திறன் மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துதல்					
குறிக்கோள்கள்		உத்திகள்		முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (மு.செ.கு)	
					அடிப்படை†
3.1	ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தரத்தை மேம்படுத்துதல்	3.1.1	ஊழியர்களின் ஆட்சேர்ப்பு, தொழில் முன்னேற்றம், தொழில்முறை மேம்பாடு ஆகியவற்றில் மனிதவளக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்	**மு.செ.கு 13 :** பொருத்தமான துறைகளில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட கல்வி சார் ஊழியர்கள் *(மொத்த கல்வி சார் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் சதவீதம்)*	58 (30%)
		3.1.2	தரம், அர்ப்பணிப்பு, நிறுவன பொறுப்பு, சமூகப் பொறுப்புக்களில் தன்னலமற்ற சேவை என்பவற்றை மதிக்கும் பல்கலைக்கழகக் கலாச்சாரத்தை ஊக்குவித்தல்.	**மு.செ.கு 14 :** பட்டத் தகுதி பெறுநிலை *(குழு பட்டப்படிப்பின் %)*	69.31%
3.2	உட்கட்டடைப்பு வசதிகளைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்	3.2.1	பெருந் திட்டத்தை புதுப்பித்தல்	**மு.செ.கு 15 :** தேவையான பௌதீக உட்கட்டமைப்புக்கள் கிடைக்கும் தன்மையின் அளவு (மாணவர் விடுதிகள், பொதுவான வசதிகள் மற்றும் பயன்பாட்டு வசதிகள் போன்றவை) *- (% மாணவர் மதிப்பீடு: மிகத் திருப்பி/ திருப்பி/ சராசரிக்கு மேல் / சராசரி/ குறைவு)*	8/45/26/15/6
		3.2.2	புதிய பீடங்கள் / துறைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை கட்டி எழுப்புதல்		
		3.2.3	தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பராமரித்தல்		
3.3	ஆளுமை மற்றும் நிர்வாகத்திறனை மேம்படுத்துதல்	3.3.1	பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல்	**மு.செ.கு 16 :** கணக்காய்வு வினாக்களின் எண்ணிக்கை	9 (2016 இல்)
		3.3.2	வளங்களை சிறப்பாக மற்றும் திறமையாக நிர்வகித்தல்		
3.4	செயல் திறன் மிக்க தர உத்தரவாத அமைப்பினைப் பேணுதல்	3.4.1	உயர் கல்வியில் தர உத்தரவாதம் குறித்த தேசியக் கொள்கையுடனான சீரமைப்பை உறுதி செய்தல்		
		3.4.2	உள்ளகத் தர உத்தரவாத பொறிமுறைகளை மேம்படுத்துதல்		

இலக்கு 4: சமூக ஈடுபாடு, ஆலோசனை மற்றும் எல்லை கடந்த செயற்பாடுகள் என்பவற்றை மேம்படுத்துதல்					
குறிக்கோள்கள்		உத்திகள்		முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (மு.செ.கு)	
					அடிப்படை†
4.1	பரந்த அளவிலான பங்கேற்புடனான உயர் கல்விக்கான சமனான அணுகல்	4.1.1	கொள்கைக் கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு நடைமுறைகளை உருவாக்குதல்	**மு.செ.கு 17 :** தொலைக்கல்விக் கற்றலுக்கான வாய்ப்புக்களின் சதவிகிதம் / எண்ணிக்கை *- (மொத்த தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் தவிர்த்து %)*	65%
		4.1.2	வெளிவாரிக் கற்கை நெறிகளுக்கான நுளைவினை விரிவுபடுத்தல்	**மு.செ.கு 18 :** தொலைக்கல்வி மற்றும் வெளிவாரிக் கற்கைகள் என்பவற்றை நிறைவு செய்யும் வீதம் *- (பதிவு செய்யப்பட்டவைகளில் இருந்து பூர்த்தி செய்யப்பட்டவைகளின் %)*	37%
		4.1.3	தனித்துவமான திறமைகளை அடையாளம் கண்டு அதற்கான பயிற்சிக்கு வசதியளித்தல்		
4.2	சமூக சேவைகள் மற்றும் எல்லை கடந்த செயற்பாட்டுத் திட்டங்களை மேம்படுத்துதல்	4.2.1	மாணவர்கள் மற்றும் ஊழியர்களை சமூகத்துடன் ஈடுபடுத்தும் வகையிலான இணைந்த மேலதிக பாடவிதான செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல்	**மு.செ.கு 19 :** சமூக கலாச்சார மற்றும் மேலதிக பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடும் நிலை (ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்) *- (% மதிப்பீடு: மிகவும் திருப்பி, திருப்பி, சராசரிக்கு மேல், சராசரி, திருப்தியில்லை)*	8/45/26/15/6
		4.2.2	ஆய்வக சேவைகள் மற்றும் அதன் செயற்பாடுகளை மேலும் ஊக்குவித்தல்		
4.3	ஆலோசனை மற்றம் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்	4.3.1	கல்வியளாளர்கள் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பொருத்தமான பொறிமுறைகள் மற்றும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவித்தல்.	**மு.செ.கு 20 :** பூர்த்தி செய்யப்பட்ட நிகழ்வுகள் மற்றும் செயல் திட்டங்களின் எண்ணிக்கை **மு.செ.கு 21 :** ஆலோசனைகளின் எண்ணிக்கை	40
		4.3.2	ஆலோசனைகள், அறிவுரைச் சேவைகளுடன் பயிற்சிகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை சமூகத்தினருக்கு வழங்குதல்		
4.4	தொழில் முனைவு மற்றும் கூட்டாண்மையை ஊக்குவித்தல்	4.4.1	தொழில்துறை – பல்கலைக்கழகம் - சமூகம் என்பவற்றிற்கிடையே வலுவானதோர் பல்கலைக்கழக வணிக இணைப்பை ஏற்படுத்தல்	**மு.செ.கு 22 :** இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் ஊக்கப்படுத்தப்படும் வெற்றிகரமான வியாபார/ வணிகமயமாக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் புதிய நடைமுறைகளின் எண்ணிக்கை	0
		4.4.2	தொழிற்றுறையுடன் இணைக்கும் வணிகமயமாக்கலை ஊக்குவித்தல்		

மேற் குறிப்பிட்ட மூலோபாயத் திட்டத்திற்கு மேலதிகமாக பங்களிக்கும் வகையில் உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தல் (AHEAD) திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகமானது பின்வரும் போட்டி மானியங்களை வென்றுள்ளது. கற்றல், கற்பித்தல், மதிப்பீடு என்பவற்றை வளப்படுத்தல் மற்றும் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தல் (ELTA-ELSE) இற்கான பீட அபிவிருத்தி மானியமானது விஞ்ஞான பீடம் மற்றும் விவசாய பீடத்தினால் வெல்லப்பட்டது (ஒவ்வொரு பீடத்திற்கும் தளா ரூபா 100 மில்லியன்), மற்றும் ELTA-ELSE இற்கான துறை அபிவிருத்தி மானியமானது மூன்று துறைகளினால் வெல்லப்பட்டது, அவையாவன மிருக விஞ்ஞானத் துறை, வணிகத் துறை மற்றும் மொழி மற்றும் தொடர்பாடல் கற்கைகள் துறை என்பனவாகும் (ஒவ்வொரு துறைக்கும் தளா ரூபா 15 மில்லியன்), இவற்றை செயற்படுத்த கற்றல் மையக் கற்பித்தலை மேப்படுத்தல், விளைவு அடிப்படையிலான கல்வியை நடைமுறைப்படுத்தல், சமூக உணர்ச்சித் திறன்களை பாடத்திட்டத்தில் இணைத்தல் மற்றும் பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்கையின் திறன்மதிப்பீட்டை அடைவதற்காக ஆங்கில மொழியை இரண்டாம் மொழியாக மேம்படுத்தல் போற்றவை நடைமுறைப்படுத்தப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள AHEAD திட்டத்தின் செயற்பாடுகள் நேரடியாக மூலோபாயத் திட்டத்தின் 1.1.2, 1.2.1, 1.2.2, 1.4.2, 1.4.3 மற்றும் 1.4.4 ஆம் இலக்க செயற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ளது. AHEAD திட்டத்தால் பயனடையாதவர்களுக்காக ஒருங்கிணைந்த நிதி பயன்படுத்தப்படும்.

மூலோபாயத் திட்டத்தின் 2வது இலக்கானது; ஆராய்ச்சியானது இரண்டு முனைகளில் ஊக்குவிக்கப்படுவதைக் காட்டுகிறது. அவையாவன, (1) பிராந்திய மற்றும் தேசத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்குவித்தல் மற்றும் (2) உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் / தாக்கம் குறித்த புதிய அறிவை உருவாக்குதல்.


முதலாவது ஆராய்ச்சிக்கான மூலோபாயத் திட்டத்தின் கீழ், கௌரவப் பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் மூலம் பிராந்தியத்தில் உள்ள சமூக மற்றும் சுற்றுச் சூழல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் பல்கலைக்கழகத்திற்கு வெளியே காணப்படும் முக்கியத்துவம் மிகு அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து முயற்சிகளை ஆரம்பித்துள்ளோம். மற்றும். பீடங்களினால் நடாத்தப்படும் வருடாந்த ஆராய்ச்சி அமர்வுகளில் முக்கிய பங்குதாரர்களை அழைப்பதன் மூலம் எமது கண்டுபிடிப்புக்களைப் பரவச் செய்ய முடியும். ஆராய்ச்சிப் பணிகளை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்காக பல்கலைக்கழக ஆராய்ச்சி மானியத்தின் மூலம் ஒரு தனி நிதிச் சாரளம் அமைக்கப்படுகிறது. இரண்டாவது ஆராய்ச்சி மூலோபாயத்தை மேம்படுத்த அறிவியல் வலை (Web of Science) மற்றும் ஸ்கூப்பஸ் (Scopus) இல் குறியிடப்பட்ட ஆய்வுப் பத்திரிக்கைகயில் வெளியிடப்படும் ஆராய்ச்சிகளுக்கு வெளியீட்டு அடிப்படையிலான ஆராய்ச்சி விருதுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு விருதும் தாக்கக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டது மற்றும் இணைப்புக்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு ஒரு வெளியீட்டிற்கு அதிகபட்சம் ரூ. 250,000 ஒரு கல்வியியலாளருக்கு வழங்கப்படும். ஒவ்வொரு ஆராய்ச்சியாளரும் திரட்டிய நிதியினை ஆராய்ச்சி தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தலாம். (உதாரணமாக: ஆராய்ச்சி மற்றும் கருத்தரங்குகளிற்கான வெளிநாட்டுப் பயணங்கள், ஆய்வுப் பத்திரிக்கைகளை முன்னெடுப்பதற்கான கட்டணங்கள், ஆராய்ச்சி உதவியாளருக்கான கட்டணம் போன்றவை)

மேலும் ஓர் துடிப்பான ஆராய்ச்சி கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இவ் இலக்கிற்கான மதிப்பைச் சேர்க்கும் வகையில் AHEAD திட்டத்தின் கீழ் இரண்டு அபிவிருத்தி சார்ந்த ஆராய்ச்சி மானியங்கள் (DOR) (தலா ரூபா 40 மில்லியன்) ஒதுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சமூக அறிவியல் மற்றும் மனிதநேயத் துறையில் உள்ளூர் ஆய்வுகளுக்கு வெளிநாட்டு ஒத்துழைப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் எளிதாக்குதல் (உதாரணமாக வெளிநாட்டிலிருந்து வருகை தரும் அறிஞர்களை அழைத்தல்) என்பது தரமான ஆராய்ச்சி வெளியீட்டை மேம்படுத்துவதற்கான ஓர் எதிர்கால யுக்த்தியாகும்.


ஆன்மீகத்தின் மதிப்புகளுடன் இயற்கையானது எவ்வாறு தொடர்பை ஏற்படுத்தி இணக்கமாக நடந்து கொள்கின்றதென்பதற்கான அடிப்படை உணர்தலைத் தூண்டுவதற்கு நவீன அறிவியலின் (அளவைப் பௌதிகவியல், ஒருங்கிணைந்த புலம் மற்றும் நரம்பியல்) நுண்ணறிவுகளுடன் பண்டைய ஞானத்தை (தியானம் / யோகா) தொகுத்து வழங்கும் முற்றுணர்வு நிலை அடிப்படையிலான கல்வி அலகு ஒன்றினை நிறுவுவதற்கான நடைமுறைகளை பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

2 வளங்கள் மற்றும் மாணவர்களின் விபரங்கள் :

பல்கலைக்கழகத்தின் பிரதான மையம் மற்றும் திருகோணமலை வளாகத்தின் ஒவ்வொரு பீடங்களிலும் உள்ள மாணவர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களுக்கு இடையிலான பரம்பல் விகிதாசாரத்தினை பின்வரும் படங்கள் (2) மற்றும் (3) காட்டுகின்றன.



படம் 2 : *இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான மையத்தில் கல்விகற்கும் மொத்த மாணவர்கள் மற்றும் மொத்த கல்விசார் ஊழியர்களிற்கு இடையிலான விகிதாசாரப் பரம்பல்*



படம் 3 : *இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் கல்வி கற்கும் மொத்த மாணவர்கள் மற்றும் மொத்த கல்விசார் ஊழியர்களிற்கு இடையிலான விகிதாசாரப் பரம்பல்*

மார்கழி 2019 இன் இறுதியில் காணப்பட்ட மாணவர்கள் மற்றும் நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை விபரங்கள் கீழே அட்டவணை (2.1) இல் காட்டப்படுகிறது.


அட்டவணை 2.1 : *மாணவர்கள் மற்றும் நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை விபரங்கள்*

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான மையம்				
பீடம்	கற்கைநெறி	மொத்த மாணவர் தொகை	மொத்த கல்விசார் ஊழியர் தொகை	மொத்த கல்விசாரா ஊழியர் தொகை
விவசாயம்	விவசாயத்தில் விஞ்ஞான இளமானி	250	29	34
கலை கலாசாரம்	கலை இளமானி	2828	62	28
வர்த்தக முகாமைத்துவம்	வணிக முகாமைத்துவ இளமானி	334	26	14
	வர்த்தக இளமானி	348		
சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான	மருத்துவ இளமானி மற்றும் சத்திரசிகிச்சை இளமானி	403	36	40
	தாதியலில் விஞ்ஞான இளமானி	119		
விஞ்ஞானம்	விஞ்ஞான இளமானி (உயிரியல்)	180	41	41
	விஞ்ஞான இளமானி (பௌதீகவியல்)	278		
	விஞ்ஞான இளமானி (சிறப்புப் பட்டம்)	52		
தொழில்நுட்பம்	உயிர் அமைப்பு தொழில்நுட்ப இளமானி (விவசாய தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவுதிறன்)	221	6	8
நூலகம்		-	5	15
ஏனைய துறைகள்		-	-	203
மாணவர்களுக்கான நிதி உதவி	16	115,449,200	165,252,150
மேலதிகம் / (பற்றாக்குறை) மொத்த செயற்பாடுகளிலிருந்து		**(460,393,711)**	**(236,742,874)**
அசாதாரண உருப்படி			
(நீக்கம் மற்றும் ஏனைய சீராக்கங்கள்)	16	(985,914)	(27,968)
நிகர உபரி / (பற்றாக்குறை) காலத்திற்கான பொது இருப்பிற்கு மாற்றப்பட்டது		**(461,379,626)**	**(236,770,842)**

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
நிதி நிலை அறிக்கை (பிரதான மையம், கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை)
31 ஆம் திகதி மார்கழி மாதம் 2019 முடிவுற்ற ஆண்டிற்கானது

மார்கழி மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	2019 ரூபா.	2018 ரூபா.
சொத்துக்கள்			
நடைமுறை சொத்து அல்லாதவை			
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	17	2,324,250,238	2,509,120,430
தொட்டுணர முடியாத சொத்துக்கள்	18	31,555,072	34,996,734
முதலீடுகள் (நீண்ட காலம்)	19	7,553,883	7,451,355
செயற்படு மூலதன வேலைகள்	20	790,337,792	524,761,553
மொத்த நடைமுறை சொத்து அல்லாதவை		3,153,696,987	3,076,330,072
நடைமுறை சொத்து			
இருப்புக்கள் / பங்குகள்	21	10,180,171	7,780,082
வர்த்தக மற்றும் ஏனைய வரவுகள்	22	449,572,978	512,630,035
முதலீடு (குறுகிய காலம்)	23	93,617,929	84,563,384
பணம் மற்றும் பணத்திற்கு ஈடானவை	24	469,233,415	352,655,663
மொத்த நடைமுறை சொத்து		1,022,604,494	957,629,164
மொத்தச் சொத்து		**4,176,301,482**	**4,033,959,236**
பொறுப்புகள்			
நடைமுறை பொறுப்புகள்			
செலுத்த வேண்டியவை	25	206,672,091	217,597,860
திரட்டிய செலவுகள்	26	19,838,361	30,091,243
குறுகிய கால குத்தகைப் பத்திரம்	27	4,558,493	5,107,034
மொத்த நடைமுறை பொறுப்புகள்		231,068,945	252,796,137
நடைமுறைப் பொறுப்புகள் அல்லாதவை			
செலுத்த வேண்டியவை	28	8,472,179	6,335,528
நீண்ட கால குத்தகைப் பத்திரம்	29	7,551,205	12,209,160
பணிக்கொடை ஒதுக்கம்	30	406,364,388	195,612,231
வரையறுக்கப்பட்ட நிதி	31	111,811,475	85,975,242
அன்பளிப்பு மற்றும் நன்கொடை	32	3,478,808	6,120,313
பிற கொடைகள்	33	487,208,067	413,214,013
மொத்த நடைமுறை பொறுப்புகள் அல்லாதவை		1,024,886,125	719,466,487
மொத்தப் பொறுப்புகள்		**1,255,955,071**	**972,262,624**
நிகர சொத்துகள் / பங்குகள்			
திரட்டப்பட்ட நிதி (மூலதனக் கொடை)	34	4,724,924,382	4,398,669,341
பிணை ஒப்பந்த இருப்பு பத்திரம்	35	171,598,895	184,582,464
பொது இருப்பு	35	(2,070,619,232)	(1,601,947,077)
மூலதன இருப்பு	37	94,442,365	80,391,884
மொத்த நிகர சொத்துகள் / பங்குகள்		**2,920,346,410**	**3,061,696,612**
மொத்தப் பொறுப்புகள் / பங்குகள் (மொத்தப் பயன்பாட்டு கொடை)		**4,176,301,482**	**4,033,959,236**

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
நிதி செயல்திறன் அறிக்கை (திருகோணமலை வளாகம்)
31 ஆம் திகதி மார்கழி மாதம் 2019 முடிவுற்ற ஆண்டிற்கானது

மார்கழி மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	2019 ரூபா.	2018 ரூபா.
இயக்க வருவாய்			
மீண்டெழும் மானியம்	4	323,000,000	263,000,000
நிகர வருமானம் / (இழப்பு) பிற செயற்பாடுகளிலிருந்து	5	-	-
வேறு வருமானம்	6	7,473,915	1,929,602
மொத்த இயக்க வருமானம்		**330,473,915**	**264,929,602**
மாணவர்களுக்கான நிதியுதவி	7	28,803,500	21,785,750
		359,277,415	**286,715,352**
இயக்கச் செலவுகள்			
தனிநபர் ஊதியங்கள்	8	226,420,441	190,255,752
போக்குவரத்து செலவுகள்	9	294,649	212,948
விநியோகம் மற்றும் நுகர்வுகள்	10	10,424,372	11,323,780
சிறிய பழுதுகள் மற்றும் பராமரிப்பு	11	8,063,497	6,500,539
ஒப்பந்த சேவைகள்	12	55,419,222	51,064,351
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	13	41,250	66,750
தேய்மானம் மற்றும் கடன்தீர் நிதித் திரட்டுச் செலவுகள்	14	135,057,451	104,107,921
ஏனைய இயக்கச் செலவுகள்	15	9,639,749	10,218,529
மொத்த இயக்கச் செலவுகள்		**445,360,635**	**373,750,570**
மேலதிகம் / (பற்றாக்குறை) இயக்க நடவடிக்கைகளில் இருந்து		**(114,886,719)**	**(108,820,968)**
மாணவர்களுக்கான நிதி உதவி	16	28,803,500	21,785,750
மேலதிகம் / (பற்றாக்குறை) மொத்த செயற்பாடுகளிலிருந்து		**(114,886,719)**	**(108,820,968)**
அசாதாரண உருப்படி			
(நீக்கம் மற்றும் ஏனைய சீராக்கங்கள்)	16	-	-
நிகர மேலதிகம் / (பற்றாக்குறை) பொது இருப்பிற்கு காலமாற்றம் செய்யப்பட்டது		**(114,886,719)**	**(108,820,968)**

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
நிதி நிலை அறிக்கை (திருகோணமலை வளாகம்)
31 ஆம் திகதி மார்கழி மாதம் 2019 முடிவுற்ற ஆண்டிற்கானது

மார்கழி மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	2019 ரூபா.	2018 ரூபா.
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்து அல்லாதவை			
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	17	1,982,267,985	2,064,384,208
தொட்டுணர முடியாத சொத்துக்கள்	18	7,537,515	8,648,797
செயற்பாட்டு மூலதன வேலை	20	239,494,294	-
மொத்த நடைமுறை அல்லாத சொத்து		2,229,299,794	2,073,033,005
நடைமுறை சொத்து			
இருப்புக்கள் / பங்குகள்	21	1,631,280	1,881,118
வர்த்தக மற்றும் ஏனைய வரவுகள்	22	195,541,792	118,476,549
பணம் மற்றும் பணத்திற்கு சமனனானவை	24	57,050,299	11,483,533
மொத்த நடைமுறை சொத்து		254,223,371	131,841,200
மொத்தச் சொத்து		**2,483,523,165**	**2,204,874,205**
பொறுப்புகள்			
நடைமுறைப் பொறுப்புகள்			
செலுத்தவேண்டியவை	25	62,688,820	36,650,191
திரட்டிய செலவுகள்	26	8,668,085	10,123,229
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		71,356,905	46,773,420
நடைமுறைப் பொறுப்புகள் அல்லாதவை			
செலுத்தவேண்டியவை	28	469,869	463,869
பணிக்கொடைக்கு ஒதுக்கப்பட்டது	30	47,682,850	20,361,538
வரையறுக்கப்பட்ட நிதி	31	5,790,416	5,790,416
அன்பளிப்பு மற்றும் நன்கொடை	32	222,371	222,371
		54,165,506	26,838,194
ஏனைய கொடை	33	443,102,171	471,477,288
மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புகள்		497,267,677	498,315,482
மொத்தப் பொறுப்புகள்		**568,624,581**	**545,088,902**
நிகர சொத்துகள் / பங்குகள்			
திரட்டப்பட்ட நிதி (மூலதனக் கொடை)	34	2,359,929,276	1,989,929,276
பிணை ஒப்பந்த இருப்பு பத்திரம்	35	123,356	123,356
பொது இருப்பு	36	(466,270,871)	(351,384,152)
மூலதன இருப்பு	37	21,116,823	21,116,823
மொத்த நிகர சொத்துக்கள் / பங்குகள்		1,914,898,584	1,659,785,303
மொத்த பொறுப்புகள் / பங்குகள் (பயன் படுத்தப்பட்ட மொத்த கொடை)		**2,483,523,165**	**2,204,874,205**

மார்கழி மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது	2019 ரூபா.	2018 ரூபா.
இயக்க நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்சல்		
வழமையான நடவடிக்கைகளிலிருந்தான மேலதிகம் / (பற்றாக்குறை)	**(576,266,346)**	**(345,591,810)**
பணமற்ற அசைவுகள்		
தேய்மானம்	438,875,197	381,815,116
கடன்தீர் நிதித் திரட்டு	(50,360,275)	(55,868,384)
முந்திய கால சரிக்கட்டல்	(232,636)	48,167
சொத்துக்கள் அகற்றல் மீது பெறப்பட்ட லாபம்	-	(423,356)
பணிக்கொடைக்கான ஒதுக்கீடு	247,686,636	49,817,914
குத்தகை வாகனங்களுக்கான நிதிச் செலவு	2,505,497	3,137,761
வட்டி வருமானம்	(4,280,980)	(1,804,017)
சரக்கிருப்பில் அதிகரிப்பு / குறைவு	(2,150,251)	1,502,168
வணிகம் மற்றும் பிற வரவுகளில் அதிகரிப்பு / குறைவு	(14,008,187)	5,892,107
செலுத்த வேண்டியவற்றின் அதிகரிப்பு / குறைவு	14,564,320	(31,865,553)
திரட்டப்பட்ட செலவுகளில் அதிகரிப்பு / குறைவு	(11,708,025)	(10,012,916)
செலுத்தப்பட்ட பணிக்கொடை	(9,613,165)	(4,653,837)
இயக்க நடவடிக்கைகளில் இருந்து நிகர காசுப்பாய்சல்	**35,011,786**	**(8,006,640)**
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்சல்கள்		
சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் கொள்வனவு	(171,888,783)	(668,923,550)
செயற்பாட்டு வேலைகள்	(505,070,534)	(53,617,063)
தொட்டுணரமுடியாத சொத்துக்கள்	(11,196,431)	(12,645,867)
பெறப்பட்ட வட்டி	4,280,979	1,804,017
முதலீடுகள்	(9,157,075)	(7,274,407)
சொத்தகற்றல் மூலமான விற்பனை வருமானம்	-	423,356
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர காசுப்பாய்சல்கள்	**(693,031,843)**	**(740,233,514)**
நிதி செயற்பாடுகளில் இருந்தான காசுப்பாய்சல்கள்		
மூலதன செலவீனங்களுக்கான அரச மானியங்கள்	825,185,375	917,394,083
நிகர நீண்ட கால கடப்பாடு	(2,515,303)	(3,890,159)
குத்தகை வாகனங்களுக்கான நிதிச் செலவு	(2,505,497)	(3,137,761)
நிதி நடவடிக்கைகளில் இருந்து நிகர நிதிப்பாய்ச்சல்கள்	**820,164,575**	**910,366,163**
பணம் மற்றும் பணத்திற்கு இணையான நிகர அதிகரிப்பு / குறைவு	**162,144,518**	**162,126,009**
கால ஆரம்ப பணம் மற்றும் பணத்திற்கு இணையானவைகள்	**364,139,196**	**202,013,187**
கால இறுதி பணம் மற்றும் பணத்திற்கு இணையானவைகள் (குறிப்பு 24)	**526,283,714**	**364,139,196**

	ஒன்று திரட்டிய நிதி	ஒப்பந்த பத்திர இருப்பு	பொது இருப்பு	பிற இருப்பு	மொத்தம்
மார்கழி 2017 இல் மீதி	5,692,915,886	188,269,504	(1,606,717,226)	86,611,119	4,361,079,283
குறித்த காலத்திற்கான மிகை/(பற்றாக்குறை)	-	-	(345,591,810)	-	(345,591,810)
பிற சரிசெய்தல்கள்	-	-	48,166	-	48,166
இருப்பில் அதிகரிப்பு / குறைவு	-	(3,563,684)	(1,070,359)	14,897,588	10,263,545
மேலதிக பங்களிப்பு	695,682,731	-	-	-	695,682,731
மார்கழி 2018 இல் மீதி	6,388,598,617	184,705,820	(1,953,331,229)	101,508,707	4,721,481,915
குறித்த காலத்திற்கான மிகை/(பற்றாக்குறை)	-	-	(576,266,346)	-	(576,266,346)
பிற சரிசெய்தல்கள்	-	-	(232,634)	-	(232,634)
இருப்பில் அதிகரிப்பு / குறைவு		(12,983,569)	(7,059,895)	14,050,482	(5,992,982)
மேலதிக பங்களிப்பு	696,255,041	-	-	-	696,255,041
மார்கழி 2019 இல் மீதி	**7,084,853,658**	**171,722,251**	**(2,536,890,104)**	**115,559,189**	**4,835,244,994**

2019 மார்கழி 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

1. நிறுவன தகவல்

1.1. உரிமம் மற்றும் சட்டரீதியான அந்தஸ்து

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகமானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ், 1986 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 01 ஆம் திகதி ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு சட்டரீதியான அமைப்பாகும். மேலும் இது மட்டக்களப்பு வந்தாறுமூலை எனும் இடத்தில் அமைந்துள்ளது. இந்த பல்கலைக்கழகம் இதற்கு முன்னதாக 1981 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 01 ஆம் திகதி இல் நிறுவப்பட்ட மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியாக முன்னதாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

1.2. முதன்மைச் செயற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

மாணவர்களுக்கு உயர் கற்றல் வசதி வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் தேசிய கொள்கைகளுக்கு அமைவாக உயர் கற்றல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதே இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதன்மையான நடவடிக்கைகளாகும்.

1.3. திருகோணமலை வளாகம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரகாரம் 1993 ஆம் ஆண்டின் 1ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் 1993 ஆம் ஆண்டு சித்திரை மாதம் நிறுவப்பட்ட திருகோணமலை இணைந்த பல்கலைக்கழக கல்லூரியானது, இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்துடன் 2001 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் 2001 ஆம் ஆண்டு ஆனி மாதம் 06 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்தகமானி அறிவிப்பால் இணைக்கப்பட்டது. திருகோணமலை வளாகத்தின் நிதி முகாமைத்துவமானது இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் கண்காணிப்பின் கீழ் உள்ளது. திருகோணமலை வளாகத்தின் மீண்டெழும் செலவுகள் மற்றும் மூலதனச் செலவுகள் என்பவற்றிற்கான நிதியானது நேரடியாக திறைசேரியில் (அரச நிதி) இருந்து பெறப்படுகின்றது. மேலும் திருகோணமலை வளாகத்தின் நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் கணக்குகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

1.4. ஒருங்கணைந்த நிதிக்கூற்று

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு மார்கழி 31 ஆம் திகதிக்கான மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கணைந்த நிதிக்கூற்றானது கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை & திருகோணமலை வளாகம் என்ற தலைப்பின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது.

1.5. நிதிக்கூற்றினை வழங்குவற்கான உத்தியோகபூர்வ திகதி

ஒருங்கணைந்த நிதிக்கூற்றினை கணக்காய்வு தலைமை அதிபதி திணைக்களத்திடம் வழங்குவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட திகதியானது 2020 ஆம் ஆண்டு ஆனி மாதம் 09 ஆம் திகதி நடாத்தப்பட்ட 305வது பேரவையில் தீர்மானிக்கப்பட்டது.

1.6. நிதிகூற்று காலப்பகுதி

பல்கலைக்கழகத்தின் நிதிகூற்று முன்னிலைப்படுத்தும் காலப்பகுதியானது 2019 ஆம் ஆண்டு தை மாதம் 01 ஆம் திகதில் முதல் 2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி வரையிலான 12 மாதங்களை உள்ளடக்கிய காலப் பகுதியாகும்.

2. குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்

2.1. பொதுவான கணக்கியல் கொள்கைகள்

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளானது இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கை அரச பொது கணக்கீட்டு தர நியமத்திற்கு (SLPSAS) அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தேவையான ஏதேனும் குறிப்பிட்ட நியமம் இலங்கை அரச பொது கணக்கீட்டு தர நியமத்தில் நிர்ணயிக்கப்பட்டிராத சந்தர்ப்பத்தில் இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS / SLFRSs) மற்றும் சர்வதேச பொது

கணக்கீட்டு தர நியமம் (IPSASs) பின்பற்றப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றானது, பொது துறை நிறுவகத்தினால் 2003 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றுநிருப இலக்கம் - PED / 19 of 19th December 2003 ஆல் அறிமுகப்படுத்தப்பட்டு, தேவையான இடங்களில் பொருத்தமான மாற்றங்களுடன் பல்கலைக்கழக மானிய ஆணையத்தால் 2004 ஆம் ஆண்டு தை மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட நிதிச் சுற்றுநிருப இலக்கம் - 2 / 2004 of 23rd January 2004 ஆல் ஏற்றுக் கொள்ளப்பட்ட வடிவமைப்பின் அடிப்படையில் முன்னிலைப்படுத்தப்பட்டது.

நிதிக்கூற்று தாயாரித்தலின் போது கீழே தரப்பட்டுள்ள முதன்மையான கணக்கியல் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக் கணக்கியல் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் தொடர்சியான அடிப்படையில் கணக்கியல் காலப்பகுதி முழுவதும் மாற்றப்படாமல் (வேறு வகையில் கூறப்பட்டால் அன்றி) பயன்படுத்தப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

2.2. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கபத்கான அடிப்படை இணக்கப்பாடு

இந்த நிதிக் கூற்று அறிக்கையானது நிதி நிலை அறிக்கை, நிதி செயல்திறன் அறிக்கை, பங்கு மற்றும் நிகர செத்துக்களின் மாற்றங்களின் அறிக்கை, பணப்புழக்கங்களின் அறிக்கை மற்றும் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கும். இந்த நிதிக் கூற்று அறிக்கையானது இலங்கை அரச பொது கணக்கீட்டு தர நியமத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

2.2.1. அளவீட்டிற்கான அடிப்படைகள்

இந் நிதிக் கூற்றுக்களானது வரலாற்றுக் கிரய (historical cost basis) அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2.2. ஒப்பீட்டுத் தகவல்கள்

நடப்பு காலத்திற்கான நிதிக் கூற்றின் புரிதலை மேம்படுத்துவதற்கும் மற்றும் ஒப்பீட்டு தன்மையை மேம்படுத்துவதற்கும் நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட அனைத்து தொகைகளுக்கும் முன்னைய நிதி ஆண்டிற்கான அளவு, விவரிப்பு மற்றும் விளக்கத் தகவல் உள்ளிட்ட ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தேவையான சந்தர்ப்பங்களில் நடப்பு ஆண்டின் விளக்கத்திற்கு ஏற்ற வகையில் ஒப்பீட்டு தகவல்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

2.2.3. செயற்பாடுகள் மற்றும் முன்னிலைப்படுத்தலுக்கான நாணயம்

இந் நிதிக் கூற்றுக்கள் முழுவதும் இலங்கை ரூபாயின் (Rs.) அடிப்படையிலேயே முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை ரூபாயே பல்கலைக்கழக செயற்பாடுகள் மற்றும் முன்னிலைப்படுத்தலுக்கான நாணய அலகாகவும் பல்கலைக்கழகம் செயற்படும் பொருளாதார சூழலில் பயன்படுத்தப்படும் முதன்மையான நாணய அலகாகவும் காணப்படுகின்றது.

வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து நிதித் தகவல்களும் வேறு விதமாக கூறப்பட்டால் அன்றி, இலங்கை ரூபாய் (Rs) அடிப்படையில் மாற்றப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

2.2.4. வெளிநாட்டு நாணய பரிவர்த்தனையின் பரிவர்த்தனை விகிதம்

இலங்கை ரூபாயினைத் தவிர்த்து பிற நாணய அலகுகளில் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்ற திகதியில் காணப்பட்ட உண்மையான பரிவர்த்தனை விகிதத்தின் தோராயமான மதிப்பிற்கு அமைய குறிப்பிட்ட நாணய அலகானது இலங்கை ரூபாவாக மாற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டு நாணயப் பெறுமதியில் காணப்படும் பணரீதியான சொத்துக்கள் (பிணை முறிகள் உள்ளடங்கலாக) மற்றும் பொறுப்புக்கள் என்பன அறிக்கையிடும் திகதியில் காணப்பட்ட பரிவர்த்தனை விகிதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாவாக மாற்றப்பட்டுள்ளன. வரலாற்றுக் கிரய அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு நாணய பெறுமதியில் காணப்படும் பணரீதியற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற திகதி அன்று காணப்பட்ட பரிவர்த்தனை விகிதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாவாக மாற்றப்பட்டு

அறிக்கையிடப்பட்டுள்ளன. மாற்றப்பட்ட மற்றும் மாற்றபடாத பண பரிவர்த்தனையின் வித்தியாசங்கள் நிதி செயல்திறன் அறிக்கையில் அறிக்கையிடப்பட்டுள்ளன.

2.2.5. பொருளின் தன்மை மற்றும் ஒருங்கிணைத்தல்

ஒரேவிதமான பொருட்களின் ஒவ்வொரு பொருள் வகுப்பும் நிதிக்கூற்றில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்க அளவு முக்கியத்துவமல்லாத வெவ்வேறு வகையான தன்மையுடைய அல்லது செயற்பாடுடைய பொருட்கள் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.3. சொத்துகள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படைகள்

2.3.1. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (PPE)

அ. அங்கீகாரம் மற்றும் அளவீடு

அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பதிவானது கிரயத்தில் இருந்து மொத்த பெறுமானத் தேய்வு மற்றும் ஏனைய சேத இழப்புக்களையும் கவனத்தில் கொண்டு பதிவு செய்யப்படுகின்றது.
முக்கியமான சொத்துக்களும் மற்றும் அவற்றின் கூறுகளும் தனித்தனியாக அடையாளப்படுத்தப்படுவதுடன் பெறுமானத்தேய்வும் செய்யப்படுகின்றது. முக்கியமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகள் மற்றும் அவற்றின் கூறுகளும் தேவையின் நிமித்தம் சரியான கால இடைவெளிகளில் மாற்றீடு செய்யப்படுதல் வேண்டும், இருப்பினும் நிறுவகமானது புதிதாக மாற்றீடு செய்யப்பட்ட புதிய சொத்துக்களின் பகுதிகள் மற்றும் அதன் கூறுகளை அதனுடன் தொடர்புடைய ஆயுட்காலம் மற்றும் பெறுமானத்தேய்வுடன் அடையாளப்படுத்தப்படுகின்றது.
அனைத்து சிறு திருத்தச் செலவுகள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் என்பன அடையாளப்படுத்தப்பட்டு நிதி செயல்திறன் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆ. கிரயம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயமானது, அதன் கொள்வனவு கிரயத்தினை உள்ளடக்குகின்றது. மேலும் ஏதாவது சொத்தினை அதன் குறித்த நோக்கத்தினை பூர்த்தி செய்யும் வகையில் இயங்கு நிலைக்கு கொண்டுவருவதற்கான ஏதேனும் செலவுகள் இருந்தால் அக்கிரயமும் சொத்தின் கிரயத்தில் உள்ளடக்கப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களானது கிரயத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பின்வரும் நாளாந்த பராமரிப்புக் கிரயம், மொத்த பெறுமானத் தேய்வு மற்றும் மதிப்பீட்டின் போது ஏற்பட்ட மொத்த தேச இழப்பு என்பன உள்ளடக்கப்படவில்லை. இருப்பினும் ஏதாவது கிரயங்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மாற்றீட்டின் போது ஏற்பட்டிருப்பின் அத்தகைய கிரயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள அதேவேளை தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்தல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இ. சேர்ப்பனவுகள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயமானது சொத்தின் எதிர்கால பொருளாதார நலன்களை கருத்தில் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது அல்லது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பல்கலைக்கழகத்தினால் கூறப்பட்ட, முன்மொழியப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யும் பட்சத்தில் கிரயமானது நம்பகத்தன்மையுடன் காணப்படும் அதேவேளை அளவீடு செய்யப்படக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அநேகமான சந்தர்ப்பங்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் அங்கீகாரமானது கிரயத்தின் அடிப்படையிலேயே நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஏதாவது சொத்துக்கள் நன்கொடையாக கிடைக்கும் பட்சத்தில் கொள்வனவு செய்யப்படும் திகதியில் சொத்தின் நியாயமான மதிப்பீட்டின் அடிப்படையில் காணப்படும் பெறுமதியானது (கிரயமாக) அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஈ. அகற்றல்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (சொத்துக்களின்) அகற்றலின் போது குறிப்பிடத்தக்க இலாப மற்றும் நட்டங்கள் ஏற்படும் பட்சத்தில் அவ் இலாப மற்றும் நட்டமானது நிதி செயலாற்றுகைக் கூற்றில் உட்படுத்தப்பட்டுள்ளது.

உ. தொடர்ச்சியான செலவுகள்

தொடர்சியான அடிப்படையில் கொள்வனவு செய்யபபடும் சொத்துக்களின் மூலதனப்படுத்தலானது சொத்தின் எதிர்கால பொருளாதார நலன்களை கருத்தில் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது அல்லது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பல்கலைக்கழகத்தினால் கூறப்பட்ட அல்லது முன்மொழியப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யும் பட்சத்தில் கிரயமானது நம்பகத்தன்மையுடன் காணப்படும் அதேவேளை அளவீடு செய்யப்படக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

ஏதாவது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கூறுகள் (சொத்துக்களின் கூறுகள்) மாற்றீடு செய்யும் போது ஏதாவது செலவுகள் ஏற்படும் பட்சத்தில் தனித்தனியாக கணக்கு வைக்கப்படும். இருப்பினும் பெரியளவிலான திருத்தம், பாரிய சீரமைப்புச் செலவுகள் மூலதனப்படுத்தப்பட்டுள்ளது. ஏதாவாது தொடர்சியான செலவுகள் மூலதனப்படுத்தப்பட வேண்டி இருப்பின், கிரயத்தின் எதிர்கால பொருளாதார நலன்களை கருத்தில் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பல்கலைக்கழகத்தினால் கூறப்பட்ட அல்லது முன்மொழியப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யும் பட்சத்தில் கிரயமானது நம்பகத்தன்மையுடன் காணப்படும் அதேவேளை அளவீடு செய்யப்படக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

ஊ. பெறுமானத்தேய்வு

பெறுமானத்தேய்வு கணிப்பிடும் முறையானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நேர்கோட்டு முறைமை அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. காணியானது ஆயுட்காலத்தின் கிரய அடிப்படையில் பதிவளிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 05 ஆம் திகதி ஐப்பசி மாதம் 1995 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தின் (சுற்று நிருப இலக்கம் - 649) அடிப்படையில் பெறுமானத்தேய்வானது செத்துக்களின் கிரய அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது.

காணி மற்றும் கட்டிடம்	5%
அலுவலக தளபாடங்கள்	10%
பொறி மற்றும் உபகரணம்	10%
அலுவலக உபகரணம்	20%
புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிக்கைகள்	20%
வாகனங்கள்	20%
ஏனைய உபகரணங்கள்	20%
தொலைபேசி	20%

பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு கோட்பாடுகள் அடிப்படையில் சொத்துக்களின் பெறுமானத்தேய்வானது, பயன்படுத்தப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டுகின்ற (நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு) சொத்துக்களாக இருத்தல் வேண்டும். அதாவது சொத்தின் அமைவிடம் சொத்தின் நிலைமை, சொத்தின் இயலளவு, செயற்திறன் முகாமைத்துவத்தின் நோக்கத்தை பூர்த்தி செய்யும் வகையில் காணப்படுதல் வேண்டும். சொத்தானது சொத்தாக அங்கீகாரிக்கப்படாத தருணத்தில் இருந்து பெறுமானத்தேய்வானது நிறுத்தப்படும்.

எ. சொத்தின் அங்கீகாரம் இழக்கப்படும் சந்தர்ப்பம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களானது அகற்றப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது எதிர்கால பொருளாதார நலன்கள் கிடைக்காது என எதிர்வுகூறும் சந்தர்ப்பத்தில் அல்லது பயன்பாட்டுக்கு உதவாத வகையில் அல்லது அகற்றப்படும் சந்தர்ப்பத்தில் சொத்தின் அங்கீகாரம் இழக்கப்படும். அங்கீகாரம் இல்லாத சொத்துக்கள் அல்லது ஏதாவாது சொத்துகள் சொத்துக்களின் அங்கீகாரத்தினை இழக்கும் சந்தர்ப்பங்களில் அத்தகைய

சொத்துக்களினால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டங்கள் கொண்டுவந்த மீதி (சொத்துக்களின் இறுதி மீதி) மற்றும் தேறிய விற்பனை அகற்றலிற்கும் இடையிலான வித்தியாசத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படும் அதேவேளை அங்கீகாரத்தினை இழக்கும் சொத்தானது நிதி செயலாற்றுகைக் கூற்றில் (வருமானக் கூற்று) வெளிப்படுத்தப்படும்.

2.3.2. நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள்

மூலதன குறைவேலையானது கிரயத்தின் அடிப்படையில் காட்டப்படும் மற்றும் ஏதாவது சேத இழப்புக்கள் ஏற்படும் அல்லது இருக்கும் பட்சத்தில் கழிக்கப்படும் (நீக்கப்படும்). ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கட்டுமானத்தின் போது அல்லது பொருத்தும் போது ஏற்படும் மூலதன தன்மையுடைய அத்தகைய செலவுகள் நேரடியாக மூலதனப்படுத்தப்படும். மூலதன குறை வேலையானது குறித்த தொடர்புடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கணக்குகளில் மாற்றப்படும் அதேவேளை சொத்துக்களானது உபயோகப்படுத்தப்பட்டு (நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு) இருத்தல் வேண்டும். மேலும் சொத்தின் அமைவிடம் சொத்தின் நிலைமை, சொத்தின் இயலளவு, செயற்திறன் பல்கலைக்கழகத்தின் நோக்கத்தை பூர்த்தி செய்யும் வகையில் காணப்படுதல் வேண்டும்.

2.3.3. தொட்டுணரமுடியாத சொத்துக்கள்

அ. அங்கீகாரம் மற்றும் அளவீடு

தொட்டுணரமுடியாத சொத்து ஒன்றினை சொத்தாக அங்கீகரிக்க வேண்டும் எனில் அச் சொத்தானது பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தல் வேண்டும். அதாவது எதிர்கால பொருளாதார நலன்களை கருத்தில் கொண்டு அடையாளப்படுத்தப்படுதல் வேண்டும் அல்லது பல்கலைக்கழகத்தினால் கூறப்பட்ட, முன்மொழியப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யும் பட்சத்தில் கிரயமானது நம்பகத்தன்மையுடன் காணப்படும் அதேவேளை அளவீடு செய்யப்படக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

தொட்டுணரமுடியாத சொத்துக்களானது கொள்வனவு செய்யப்படும் போது தனித்தனியாக அளவீடு செய்யப்பட்டு ஆரம்ப கிரயத்தின் அடிப்படையில் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் அல்லது அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும் தொட்டுணரமுடியாத சொத்தின் ஆரம்ப அங்கீகாரமானது பிரயோகிக்கப்படும் முறையானது பின்வருமாறு காணப்படும். அதாவது கிரயத்தில் இருந்து மொத்த கடன் நிதி சேகரிப்பு மூலமாக மூலதனத்தைக் குறைத்தல் அல்லது அருவ சொத்து பதிவளிப்பு (Amortization) அல்லது ஏதாவது சேத இழப்புக்கள் இருக்கும் பட்சத்தில் அவைகளையும் கழிப்பதன் மூலம் பெறப்படும்.

ஆ. அருவச் சொத்து பதிவளிப்பு - Amortization (கடன் நிதி சேகரிப்பு மூலமாக மூலதனத்தைக் குறைத்தல்)

தொட்டுணரமுடியாத சொத்துக்களின் அருவச் சொத்து பதிவளிப்பு (Amortization) முறையானது நேர்கோட்டு முறைமை அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. மேலும் அச்சொத்தின் வரையறுக்கப்பட்ட ஆயுட்காலத்தின் அடிப்படையிலும் மற்றும் சொத்தின் பெறுமதிக்கு ஏற்ற வகையிலும் பதிவளிக்கப்படுகின்றது அல்லது கணிப்பிடப்படுகின்றது.

தொட்டுணரமுடியாத சொத்துக்களின் அருவச் சொத்து பதிவளிப்பு முறையானது பின்வரும் எடுகோள்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

- நிலையான சொத்துக்களினை பராமரிக்கும் பதிவேட்டு மென்பொருளானது ஐந்து (05) வருடத்தினை அடிப்படையாகக் கொண்டு நேர்கோட்டு முறைமை அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது.
- கணணி மென்பொருள் மற்றும் ஏனைய தொட்டுணரமுடியாத சொத்துக்களின் அருவச் சொத்து பதிவளிப்பானது ஐந்து (05) வருடத்தினை அடிப்படையாகக் கொண்டு நேர்கோட்டு முறைமை அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது.

இ. சொத்தின் அங்கீகாரம் இழக்கப்படும் சந்தர்ப்பம்

தொட்டுணரமுடியாத சொத்துக்களானது அகற்றப்படும் சந்தர்ப்பத்தில் அங்கீகாரம் இல்லாத சொத்துக்கள் அல்லது ஏதாவாது சொத்துகள் சொத்துக்களின் அங்கீகாரத்தினை இழக்கும் சந்தர்ப்பங்களில் அத்தகைய சொத்துக்களினால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டங்கள், கொண்டுவந்த மீதி (சொத்துக்களின் இறுதி மீதி) மற்றும் தேறிய விற்பனை அகற்றலிற்கும் இடையிலான வித்தியாசத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படும் அதேவேளை அங்கீகாரத்தினை இழக்கும் சொத்தானது நிதி செயலாற்றுகைக் கூற்றில் (வருமானக் கூற்று) வெளிப்படுத்தப்படும் அல்லது முன்னிலைப்படுத்தப்படும்.

2.3.4. இருப்பு / தொக்குகள்

இருப்பு பெறுமதியானது ஆரம்ப கிரய அடிப்படையில் அங்கீகரிக்கப்படும். இருப்பினும் பெற்றுக்கொள்ளப்படும் இருப்பானது பரிமாற்ற பரிவர்த்தனை அல்லாத சந்தர்ப்பத்தின் போது கொள்வனவு செய்யப்படும் தினத்தில் இருப்பின் முகப் பெறுமதியானது கிரயமாக கொள்ளப்படும்.

ஆரம்ப அங்கீகரித்தலின் பின்னர் இருப்புக்களின் கிரய மதிப்பீடானது முதல் வந்தது முதல் வெளியேறுதல் (F I F O - First in First out) என்ற முறைமையின் அடிப்படையில் கணிக்கப்படும் அதேவேளை கல்விசார் திணைக்களம் அல்லது நிர்வாக திணைக்களம் போன்றவற்றில் வைத்திருக்கும் இருப்பின் பெறுமதியானது செலவில் இருந்து விலக்கப்பட்டு அல்லது உட்படுத்தப்படாது காணப்படும்.

2.3.5. காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு கையிருப்பு (கையில் உள்ள காசு), வங்கியில் உள்ள காசு, அழைப்ப வைப்புக்கள் மற்றும் உயர்ந்த திரவத்தன்மையுடைய முதலீடுகள் அதாவது மூன்று மாதம் (03) அல்லது மூன்று மாதத்திற்கு (03) குறைவான உடனடியாக காசாக மாற்றக்கூடிய தொகைகைள் அத்துடன் காசாக மாற்றக்கூடிய சந்தர்ப்பத்தில் அத் தொகைகள் பொருண்மைத்தன்மை அற்ற பெறுமதியாக காணப்படக்கூடியவைகள் காசு மற்றும் காசுக்கு சமமானவையாக கொள்ளப்படும்.

காசு பாய்சல் கூற்று நேர் முறையில் தயாரித்தலின் போது வங்கி மேலதிக பற்றானது காசு மற்றும் காசுக்கு சமமானவை என்ற கூறுகளின் அடிப்படைக்குள் உள்ளடங்கும்.

2.4. பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

2.4.1. பொறுப்புக்கள்

கொடுப்பனவினை செலுத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும் போது அல்லது ஒரு வருட அறிக்கையிடல் காலப்பகுதிற்குள் (நிதிக் கூற்றுக் காலப்பகுதிற்குள்) செலுத்த வேண்டிய கொடுப்பனவானது பொறுப்பாக அடையாளப்படுத்தப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் (ஐந்தொகை) நடைமுறைப் பொறுப்பாக காட்டப்படும். இந்த நிதிக் கூற்று தயாரித்தலின் போது அறியப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் பொறுப்புக்களாக கணக்கிடப்பட்டுள்ளது.

2.4.2. ஏற்பாடு

பல்கலைக்கழகமானது சட்டரீதியான தேவைப்பாட்டின் போது அல்லது கடந்தகால நிகழ்வுகளின் அடிப்படையில் ஏற்பாட்னை நிதி நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரித்து வெளிப்படுத்துகின்றது அல்லது முன்னிலைப்படுத்துகின்றது. இவ் ஏற்பாடானது பொறுப்பு ஏற்படும் பட்சத்தில் பொறுப்பினை தீர்ப்பதற்கு பயன்படுத்துகின்ற அதேவேளை பொறுப்பானது நம்பத்தகுந்த முறையில் அளவிடப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும். எதிர்கால செயற்பாட்டு நட்டங்களுக்காக ஏற்பாட்டினை மேற்கொள்ள அல்லது ஏற்படுத்த முடியாது. சில சந்தர்ப்பங்களில் செயற்பாட்டு உரிமை கோரல்கள் ஏற்பாடுகளாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இருப்பினும் அவற்றின் தொடர்புடைய தன்மை மற்றும் நிச்சயமற்ற தன்மைகளை அல்லது நிச்சயமற்ற சந்தர்ப்பங்கள் தொடர்பில் விளக்கமான தகவல்களை அல்லது விரிவான தகவல்களை வெளிப்படுத்துவது நடைமுறையில் சாத்தியமற்றது.

அ. ஊழியர் நலன்கள்

i. பணிக்கொடைக்கான ஏற்பாடு

பணிக்கொடைக்கான ஏற்பாடானது பணிக்கொடை கொடுப்பனவிற்கான 12ம் இலக்க 1993ம் ஆண்டு சட்ட மூலத்தின் அடிப்படையில் தகுதியுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் வழங்குவதற்காக பணிக்கொடைக்கான ஏற்பாடானது நிபந்தனைகளின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. திறைசேரியானது மேற்படி ஏற்பாட்டினை (பணிக்கொடைக்கான ஏற்பாடு) பிரதிநிதிநிதித்துவப்படுத்தும் வகையில் வெளியகரீதியாக முதலீட்டினை மேற்கொள்வதற்காக எந்தவொரு நிதி ஒதுக்கீட்டினையும் மேற்கொள்ளவில்லை.

குறித்துரைக்கப்பட்ட மேற்படி நலன் திட்டத்தின் (பணிக்கொடை) மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் நலன்கள் ஊழியரின் ஓய்வூதிய காலத்திலேயே கிடைக்கப்பெறும். இருப்பினும் பொதுவாக பின்வரும் ஒரு அல்லது பல காரணிகளின் செல்வாக்கிற்கு உட்படும். அதாவது வயது, சேவை செய்த ஆண்டு காலம் (சேவைக் காலங்கள்) மற்றும் இழப்பீடு.

ii. குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமானது வேலைக்குப் (வேலை வாய்ப்பு) பின்னரான திட்டமாகும். மேலும் நிறுவகமானது குறித்த நிலையான தொகையினை பங்களிப்புத் தொகையாக வேறெரு நிறுவகத்திற்கு செலுத்துகின்ற அதேவேளை குறித்துரைக்கப்பட்ட தொகையினை விட மேலதிகமான தொகையினை செலுத்த எந்தவொரு சட்டத்தினாலேயே வலியுறுத்தப்படவில்லை. பங்களிப்புத் திட்டத்தின் படி செலுத்த வேண்டிய சட்டரீதியான பங்களிப்புத் தொகையானது நிதி செயலாற்றுகைக் கூற்றில் செலவாக (வருமானக் கூற்றில்) அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- **பல்கலைக்கழக சேமலாப நிதி (UPF)**

  பல்கலைக்கழக ஊழியர்கள் அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 10% ஆன தொகையை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேலும் பல்கலைக்கழகத்தினால் மாதாந்த சம்பளத்தின் 08% ஆன தொகையை பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்துவதுடன், 07% ஆன தொகையை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கும் (UPF) செலுத்துதல் வேண்டும்.

- **ஊழியர் நம்பிக்கை நிதி (ETF)**

  பல்கலைக்கழகமானது ஒவ்வொரு ஊழியர்களிற்கும் ஊழியர்களின் சம்பளத்தின் 3% ஆன தொகையை ஊழிய நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

2.4.3. நிச்சயமற்ற பொறுப்புக்கள்

பல்கலைக்கழகமானது எந்தவொரு நிச்சயமற்ற பொறுப்புக்களையும் அங்கீகாரம் செய்வதில்லை. இருப்பினும் நிச்சயமற்ற பொறுப்புக்களின் (நிச்சயமற்ற தன்மை காணப்படும் போது) விபரங்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்களாக வெளிப்படுத்துதல் வேண்டும்.

2.4.4. நிச்சயமற்ற சொத்துக்கள்

பல்கலைக்கழகமானது எந்தவொரு நிச்சயமற்ற சொத்துக்களையும் சொத்துக்களாக அங்கீகாரம் செய்வதில்லை. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எதிர்கால நிச்சயமற்ற சாத்தியமான நிகழ்வுகள் காணப்படும் அல்லது ஏற்படும் பட்சத்தில் (சொத்துக்கள் தொடர்பான நிச்சயமற்ற தன்மை காணப்படும் போது) நிச்சயமற்ற சொத்துக்கள் தொடர்பான விபரங்களை பல்கலைக்கழகமானது நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்களாக வெளிப்படுத்துதல் வேண்டும்.

2.5. பெறுவனவுகள், நிதிப் பயன்பாடு, மானிய மற்றும் ஒதுக்கங்கள் தொடர்பான கணக்கீட்டு பதிவுகள்

2.5.1. வரையறுக்கப்பட்ட நிதி

மானியம் அல்லது நன்கொடைகள் அடிப்படையில் குறிப்பிட்ட செயற்திட்டத்தினை அல்லது செயற்பாட்டினை முன்னெடுக்கும் போது (மானியம் அல்லது நன்கொடைகள் பெற்றுக்கொள்ளப்படும் போது) வரையறுக்கப்பட்ட நிதி கணக்கில் காணப்படும் நிதி பயன்படுத்தப்படும் அதேவேளை பயன்படுத்தப்படாத நிதியானது தொடர்புடைய குறிப்பிட்ட நிதிக் கணக்கில் காணப்படும். அத்துடன் திரட்டப்பட்ட நிதி மற்றும் ஒதுக்கங்களாக நிதி நிலைமைக் கூற்றில் (ஐந்தொகை) பயன்படுத்தப்படும் வரை வெளிப்படுத்தப்படும்.

பல்கலைக்கழகத்தில் நிதி மற்றும் ஒதுக்கங்கள் என்ற வகுப்பின் அடிப்படையில் பின்வரும் கணக்குகள் காணப்படுகின்றது.

அ. ஆராய்ச்சி மானியம்

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம் - பிரதான மையம்

- ஆராய்ச்சி மானியம் - பொது
- ஆராய்ச்சி மானியம் - தகுதிகாண் காலம் மற்றும் சிரேஷ்ட கல்விசார் விரிவுரையாளர்ளுக்கானது – உள்நாட்டில் முனைவர் தகுதியைப் பெறுபவர்களுக்கானது.
- கணணி அபிவிருத்தி நிதி
- உயர் கல்விக்கான தேசிய மையம் - ஆராய்சி மானியம்
- புகையிரத விரிவாக்க திட்டம்
- CARP ஆராய்சி அபிவிருத்தி திட்டம்
- சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த விரிவுரையாளர் முதலீட்டு நிதிலிருந்தான வட்டி
- அறக்கட்டளை முதலீட்டு நிதியில் இருந்தான வட்டி
- குறுங்கால முதலீட்டு நிதிலிருந்தான வட்டி
- அறக்கட்டளை நிதி கணக்கு
- உபவேந்தர் நிதி
- சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த விரிவுரையாளர் நிதி
- புலமைப்பரிசில் நன்கொடையாளர்கள் உள்ளடக்கம்

ஆ. சுய நிதி திட்டங்கள்

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம் - பிரதான மையம்

- வெளிவாரி கற்கை நெறி – கலை இளமாணி
- வெளிவாரி கற்கை நெறி – வணிக நிர்வாக இளமானி
- வெளிவாரி கற்கை நெறி – பொருளியல் இளமாணி
- வெளிவாரி கற்கை நெறி – விவசாயத்தில் விஞ்ஞான இளமானி
- வெளிவாரி கற்கை நெறி – விஞ்ஞான இளமானி
- வெளிவாரி கற்கை நெறி – தாதியியலில் விஞ்ஞான இளமானி
- முதுமானி பட்டப்படிப்பு கற்கை நெறிகள் - கலை மற்றும் கலாச்சாரம் (கலை முதுமானி, கல்வியியலில் முதுமானி, முதுதத்தவமானி)
- பட்டபின் கற்கை நெறி - வணிக மற்றும் முகாமைத்துவம் - பொருளாதார அபிவிருத்தி முதுமானி
- பட்டபின் கற்கை நெறி - வணிக மற்றும் முகாமைத்துவம் - வணிக முகாமைத்துவ முதுமானி
- பட்டபின் கற்கை நெறி - வணிக மற்றும் முகாமைத்துவம் - முகாமைத்துவ பட்டப்பின் கற்கை
- மேலதிகக் கற்கைகள் - கலை மற்றும் கலாச்சாரம் - அனர்த்த முகாமைத்துவம்

- மேலதிகக் கற்கைகள் - கலை மற்றும் கலாச்சாரம் - ஆங்கில தொடர்பாடல்
- மேலதிகக் கற்கைகள் - கலை மற்றும் கலாச்சாரம் - இதழியல்
- மேலதிகக் கற்கைகள் - கலை மற்றும் கலாச்சாரம் - அலுவலக முகாமைத்துவம்
- மேலதிகக் கற்கைகள் - கலை மற்றும் கலாச்சாரம் - உளவியல் மற்றும் ஆளுமை அபிவிருத்தி
- மேலதிகக் கற்கைகள் - கலை மற்றும் கலாச்சாரம் - ஆலோசனை
- சமூக ஆராய்ச்சி அபிவிருத்திக்கான மையத்தின் சான்றிதழ் கற்கை நெறி - உளவியல்
- ஆங்கில மொழிக் கற்கைகள் அலகு
- நிலையான வேளாண்மை மற்றும் வள முகாமைத்துவ மையம் (ஊநுளுளுயுசுஆ)
- பேண்தகு விவசாயத்தில் டிப்ளோமா
- நிறுவனத்தின் மூலம் தேர்ச்சி அடிப்படையிலான பொருளாதார அமைப்பு (ஊநுகுநு)

திருகோணமலை வளாகம்

- வரையறுக்கப்பட்ட நிதி

2.5.2. ஏனைய மானியம்

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம் - பிரதான மையம்

- மாணவர் நலன்புரி நிதி
- ஊழிய அபிவிருத்தி மையத்திற்கான பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் மானியம்
- நூலகத்திற்கான இட ஒதுக்கீடு மற்றும் பாதுகாப்பு பகுதியினை நிறுவுவதற்கான பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் மானியம்
- முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் குடிசைக் கைத்தொழில் அமைப்பிற்கான பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் மானியம் (முயற்சியாண்மை திறன் அபிவிருத்தி)
- கனேடிய உலக பல்கலைக்கழகங்களுக்கான சேவை மானியம் - கனடா
- மாணவர்களுக்கான நிதி
- சுனாமி புலமைப்பரிசில் விருது - 2012
- புணர்வாழ்வுக்கான மானியம்
- கலாச்சார மானியம் - நோர்வேஜிக்
- நிலையான வேளாண்மை மற்றும் வள முகாமைத்துவ மையம்
- RNE மானியம் - கனிஷ்ஸ்ட க/குக்கு மாற்றப்பட்டது. விவசாய ஊழிர்களுக்கானது
- BIRRP மானியம், மதிப்பிடுதல் - கோழி, பால் உற்பத்தி
- தாதியியல் கற்கை நெறி
- இனவிருத்தி தொடர்பான சுகாதார கல்வி நிகழ்சி திட்டம் (ARH திட்டம்)
- மேலதிகக் கற்கைகள்
- போக்குவரத்து அமைச்சு / ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி முகாமைத்துவம், லாபத்தை எடுத்துக் கொள்ளல் (T / P)
- மக்கள் தொகை நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிதி (UNFPA) திட்டம் - மாணவத் தலைவர்களுக்கான சக கல்வி மற்றும் தகவல் தொடர்பு பயிற்சி
- இலங்கை தேசிய விஞ்ஞான அமைப்பு
- சர்வதேச தமிழ் மன்றம்
- தமிழ் நாடு விவசாய பல்கலைக்கழகம்
- தமிழ் மாணவர் சங்கம் - கனடா
- குழந்தைப் பருவ அபிவிருத்தி மற்றும் முன் பள்ளி கல்வி
- G E L T

- இலங்கை - ஜெர்மன்; நிறுவனத்தின் மூலம் தேர்ச்சி அடிப்படையிலான பொருளாதார அமைப்பின் நிகழ்சி திட்டம்
- இலங்கை - இந்தியா அமைப்பு
- கிழக்கு மாகாண பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இனவிருத்தி தொடர்பான சுகாதார கல்வி மற்றும் போர்க்குணம் பற்றிய ஆய்வு
- இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் தொடர்பான கருத்தரங்கு மற்றும் பயிற்சி பட்டறை - 2003
- Pilot Fingerling Hatchery – CARM – ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம்
- பிரிட்டிஸ் கவுன்சில் ஐக்கிய இராச்சியம் மற்றும் இலங்கைக்கான இணைப்புத் திட்டம்
- இறால் வளர்ப்பிற்கான வலயத் திட்டம்
- சுகாதார இனவிருத்தி மற்றும் ஆலோசனை நிகழ்சி திட்டம் (UNFPA Project.)
- வன விலங்கு ஆராய்சி மாணியம
- DARAM
- சுனாமி மீள்வீடமைப்பு நிகழ்சி திட்டம்
- ஆசிய அமைப்பு மாணியம்
- அவுஸ்திரேலிய மற்றும் சுவிசர்லாந்து செஞ்சிலுவை
- CIDA நிகழ்சி திட்டம்
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப தனிப்பட்ட அபிவிருத்தி நிகழ்சி திட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கி)
- பல்கலைக்கழக தொழில் சமூக தொடர்புகலங்களை நிறுவ / அபிவிருத்தி செய்வதற்கான நிதி விநியோகம்
- சமாதான மற்றும் சமூக நல்லிணக்க நிகழ்சி திட்டம்
- பாடசாலை ஆசிரியர்களுக்கான குறுங்கால தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிகழ்சி திட்டம்
- IRQUE
- IRQUE / QUF தொகுதி 3 – கலை மற்றும் கலாச்சார பீடம் விரிவாக்கம்
- சுனாமி நிதி
- NTNU இணைப்புத் திட்டம் (NUFU நிதி)
- NUFU இணைப்புத் திட்டம், NUFU நிதி - மேந்தலை செலவுகள் - 10%
- ஐக்கிய அமெரிக்க உதவி நிதி திட்டம்
- சர்வதேச சமாதான பேரவை
- Noma - புலமைபரிசில் நிகழ்சி திட்டம்
- பொருளாதார அபிவிருத்தி முதுமானி
- IFS
- மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபை
- பாடசாலையின் உயர் கல்வி மாணவர்களுக்கான செயல்முறை விளக்கம்
- கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கான தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் கற்கை நெறி
- முதுதத்துவமானி நிகழ்சி திட்டம் - (தழிழ், பூகோளவியல் மற்றும் நாடகம்)
- L 3 செயற்திட்டம் (Commonwealth of Lear)
- நீர் பரிசோதனைத் திட்டத்திற்காக World VISION ஆல் வழங்கப்பட்ட நிதி (RIWAS)
- பொது அலுவலர்களுக்கான பட்டப்படிப்பு நிகழ்சி திட்டம் - நிர்வாகம்
- நாளாந்த தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் கற்கை நெறி – விலங்கு விஞ்ஞானம்
- கலை முதுமானி
- மனித வள அபிவிருத்திற்காக உலக சுகாதார மையத்தினால் (WHO) ஆல் வழங்கப்பட்ட நிதி – மோதல் முரண்பாடுகள் ஏற்பட்ட பகுதிகளில் இருந்து அதற்குப் பின்னதாக சுகாதாரத் துறையில் பட்டம் பெறும் பட்டதாரிகளுக்காக.

- தகுதிகாண் ஊழியர்களுக்கான பயிற்சி மற்றும் ஆரம்ப செயல்முறை சம்பந்தமான பயிற்சி 2011 / 2012 (ஊழிய அபிவிருத்தி மையத்தினால்)
- ஊழிய நலன்புரி நிதி
- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் இருந்து வழங்கப்பட்ட உதவித் தொகை
- ஏனைய மானியம்
- இயற்கை உணவு விவசாய செயற்திட்டம் நிகழ்சி திட்டம்
- வீட்டு வசதிக்கான அடிப்படை ஆய்வு கணக்கெடுப்பு நிகழ்சி திட்டம் - POA / EUSL)
- உலக சுகாதார மைய செயற்திட்டம் – DTHR செயற்திட்டம் – கௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம்
- உலக சுகாதார மைய செயற்திட்டம் – DFC செயற்திட்டம் – கௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம்
- திட்ட நிகழ்ச்சிக்கான புவியியல் மற்றும் நிர்வாக இருப்பிடங்களைத் தேர்ந்தெடுப்பது குறித்த ஆய்வு
- CARP – NARS நிகழ்சி திட்டம்
- WASH Engline கணக்கெடுப்பு நிகழ்சி திட்டம் - மால்டெசர் இன்டர்நேசனல்.
- கலாச்சார அடிப்படையிலான மீன்வள மேம்பாடு - கிழக்கு மாகாணத்தில் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகத்தினால் கனடாவின் கல்காரி பல்கலைக்கழகத்தின் நிதியுதவியோடு முன்னெடுக்கப்படுகிறது
- முரண்பாடு அமைதி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டம் (Noma Project)
- Land O' இலங்கை அபிவிருத்தி DEEP செயற்திட்டம் - விவசாய பீடம்
- தமிழ் பொறியியலாளர் அமைப்பின் மாணவர்களுக்கான புலமைப்பரிசில்
- நீர்வள முகாமைத்துவம் மற்றும் அதன் தொடர்புடைய ஆய்வுகளுக்கான மையம்
- CARP – மரபணுவைக் கையாளுதல் மூலம் காரம் கூடிய மிளகு சாகுபடியை மேம்படுத்துதல்
- நில பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் துறை – GIS பயிற்சி நிலையத்திற்கான நிதி

திருகோணமலை வளாகம்

- இந்திய உயர் ஆணைக்குழு
- வாகனங்களுக்கான மானியம்
- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிலிருந்தான தகவல் தொழில்நுட்ப மானியம்
- உயர் கல்வி அமைச்சு

2.6. நிதி செயலாற்றுகைக் கூற்று

2.6.1. மீண்டெழும் மானியம்

மீண்டெழும் செலவினை மேற்கொள்ளும் முகமாக அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் மானியமானது மீண்டெழும் மானியத்திற்குள் உள்ளடங்குகின்றது.

2.6.2. தேறிய வருமானம் மற்றும் ஏனைய நடவடிக்கைகளில் இருந்தான வருமானம் / நட்டம்

ஏனைய நடவடிக்கைகளில் இருந்து கிடைக்கும் தேறிய வருமானம் / தேறிய நட்டம் போன்ற மூலகங்களின் அங்கீகாரமானது பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் பல்வேறு விதமான கற்கை நெறி மற்றும் நிகழ்சி திட்டங்கள் மூலமாக கிடைக்கப்படுகின்றன அல்லது அங்கீகரிக்கப்படுகின்றன. வருமானம் மற்றும் செலவினைக் அடிப்படையாகக் கொண்ட தன்னியக்க நிதியீட்ட கற்கை நெறிகளான இளங்கலை பட்டதாரிகளின் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கை நெறி போன்ற நிகழ்சி திட்டங்கள் காசு மூலத்தினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. இத்தகைய நடவடிக்கைகளில் இருந்து கிடைக்கப்பெறும் வருமானம் ஆனது நிதி செயலாற்றுகைக் கூற்றில் வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும் தொடர்புடைய தொடர்ச்சியான சீராக்கம் அல்லது செம்மையாக்கமானது பொது ஒதுக்கத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் தேறிய வருமானம் தொடர்புடைய கணக்குகளின் ஆரம்ப மீதியாக கொண்டு வரப்படுகின்றது அல்லது மாற்றப்படுகின்ற அதேவேளை தேறிய

நட்டமானது (குறை) ஏற்படும் பட்சத்தில் வரையறுக்கப்பட்ட நிதிக் கணக்கில் நடைமுறைப் பொறுப்பாக வெளிப்படுத்தப்படுகின்றது. பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகள் மற்றும் நிகழ்சி திட்டத்தின் வருமானம் அல்லது நட்டமானது பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகின்றது.

அ. வெளிவாரி கற்கை நெறி நிகழ்சி திட்டங்கள்.

ஆ. பட்டப்பின் படிப்பு கற்கை நெறி – வணிக மற்றும் முகாமைத்துவம்

இ. முதுமானி பட்டப்படிப்பு கற்கை நெறி நிகழ்சி திட்டம் - கலை மற்றும் கலாச்சாரம்

ஈ. மேலதிக கற்கைகள் - கலை மற்றும் கலாச்சாரம்

உ. முதுமானி பட்டப்படிப்பு கற்கை நெறி நிகழ்சி திட்டம் – விஞ்ஞானம்

ஊ. டிப்ளோமா – விவசாயம்

எ. வெளிவாரி கற்கை நெறி நிகழ்சி திட்டத்தில் இருந்தான வருமானம் - திருகோணமலை வளாகம்

2.6.3. மாணவர்களின் கட்டணத்திற்கான கணக்கு / கணக்கீடு

மாணவர் பதிவு கட்டணம், வகுப்புக் கட்டணம் / விரிவுரைக் கட்டணம் மற்றும் மருத்துவக் கட்டணம் ஆகியன காசு அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது. அத்துடன் ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது. பல்கலைக்கழகமானது மேற்குறித்த இவ்வாறான நடைமுறையினாலேயே தான் தனது கணக்கு பதிவுகளை ஆரம்பத்தில் இருந்து மேற்கொண்டு வருகின்றது.

2.6.4. செலவுகளிற்கான அங்கீகாரம்

பல்கலைக்கழகத்தினால் குறித்த காலப்பகுதியில் இடம்பெறுகின்ற திட்ங்களை மேற்கொள்வதற்கான செலவுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மூலம் ஏற்படும் செலவுகளினை நிதி செயலாற்றுகைக் கூற்றில் அங்கீகரித்து வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும் ஏனைய செலவுகளான நிலைய நிர்வாகச் செலவு, பல்கலைக்கழகத்தினை நடாத்துவதற்கான செலவு மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவைகள் எதிர்பார்த்த வினைத்திறனில் இயங்குவதற்கான பராமரிப்பு மற்றும் மறுசீரமைப்பு செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கில் கொள்ளப்படுவதுடன் நிதி செயலாற்றுகைக் கூற்றில் வெளிப்படுத்தகப்படுகின்றது.

2.6.5. நிதிச் செலவுகள்

நிதிச் செலவுகள் ஆவன அட்டுறு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற (அங்கீகரிக்கப்படுகின்ற) அதேவேளை செலுத்தப்படாத செலவுகள் பொறுப்பாக மாற்றப்படுகின்றது அல்லது காட்டப்படுகின்றது.

2.7. காசுப்பாய்சல் கூற்று

காசுப்பாய்சல் கூற்றானது இலங்கை அரச பகுதிகளிற்கான கணக்கீட்டு நியமம் - 02 (SLPSAS-02) அடிப்படையில் தயாரிக்கின்ற அதேவேளை காசுப்பாய்சல் கூற்றானது நேர் முறையில் தயாரிக்கப்படுகின்றது. பெற்றுக்கொள்ளப்படும் மூலதன மானியமானது நிதி காசுப் பாய்சலின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

2.8. நிதிக்கூற்று அறிக்கையிடல் காலப்பகுதிக்கு பின்னரான நிகழ்வுகள்

நிதிக்கூற்று அறிக்கையிடல் காலப்பகுதிக்கு பின்னர் ஏதாவது பொருண்மைத் தன்மை வாய்ந்த நிகழ்வுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவசியமான, பொருத்தமான செம்மையாக்கல்கள் அல்லது சீராக்கத்தினை கணக்குகளில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

2.9. ஏனைய வெளிப்படுத்தல்கள்

2.9.1. கல்விக் கொடுப்பனவு மற்றும் மகாபொல போன்றவற்றிற்கான மானியம்

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் 14ம் திகதி ஐப்பசி மாதம் 1987ம் ஆண்டு (14.10.1987) திகதியிடப்பட்ட UGC/F/BUR/87 இலக்க சுற்று நிருபத்தின் அடிப்படையில் கல்விக் கொடுப்பனவிற்கான மானியமானது வருமானமாக மீண்டெழும் மானியத்தின் கீழ் வெளிப்படுத்தப்படுகின்ற அதேவேளை கல்விக் கொடுப்பனவினை செலுத்துவது (வழங்குவது) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்று நிருபத்தின் அடிப்படையில்

(4.3.7.1705) நெறிப்படுத்தப்பட்டது போல் செலவாக வெளிப்படுத்தப்படுகின்றது. நிதி செயலாற்றுகைக் கூற்றில் வேறு வகையில் மாணவர்களுக்கான நிதி உதவித் தொகை அடிப்படையில் காட்டப்படுகின்றது.

2.9.2. உயர் கல்விற்கான இருபதாம் நூற்றாண்டிற்கான (20ம்) நிகழ்சித் திட்டம் (HETC)

உலக வங்கியால் நிதியளிக்கப்பட்ட (HETC) நிகழ்சித் திட்டத்தை PPDU மூலம் பல்கலைக்கழகம் செயல்படுத்தி வந்துள்ளது. இதற்காக வேறான வங்கிக் கணக்கு பராமரிக்கப்பட்டு வருவதுடன் வங்கிக் கணக்குக் கூற்றும் தகுந்த கால இடைவெளியில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்சித் திட்டம் முழுமையாக முடிவடைந்ததன் பின்னர், இந்த நிகழ்சித் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து சொத்துக்களும் பல்கலைக்-கழகத்திற்குரிய சொத்துக்களாகவே கணக்கில் கொள்ளப்படுகின்றது.

5 2019 ஆம் ஆண்டிற்கான அறிக்கை கணக்காய்வுக்குழுத் தலைவரின்

1. அறிமுகம்

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை பேரவையின் கீழ் இயங்கிவரும் குழுக்களில் கணக்காய்வுக் குழுவும் ஒன்றாகும். ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட இக் குழுவானது ஒவ்வொரு ஆண்டும் கூடுவதோடு பல்கலைக்கழகத்தின் நிதி, நிர்வாகம், மனித சொத்துக்கள் மற்றும் கல்வி நிர்வாகம் என்பவை பற்றி விவாதிக்கின்றது. இதன் உறுப்பினர் தகுதி, அலுவலக நிபந்தனைகள், பொறுப்புக்கள், அதிகாரங்கள் மற்றும் தேர்தல் நடைமுறைகள் என்பன பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் பேரவை ஆகியவற்றின் ஊடாக இலங்கையின் திறைசேரியினால் நிர்வகிக்கப்படுகிறது.

2. கணக்காய்வு குழுவின் குறிப்பு நிபந்தனைகள்:

i. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பொறுப்புக்களை தீர்மானித்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை ஆய்வு செய்தல்.

ii. பல்கலைக்கழகத்தின் சகல நடவடிக்கைகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்புகளை மதிப்பாய்வு மற்றும் மதிப்பீடு செய்தல்

iii. உள்ளகக் கணக்காய்வாளரினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வுத் திட்டம் மற்றும் வேலைத் திட்டத்தை முற்பார்வை செய்தல் மற்றும் பரிந்துரை செய்தல்.

iv. செலவு செயல்திறனை தொடர்ச்சியான இடைவெளியில் செயல்திறன் மதிப்பாய்வு செய்தல் மற்றும் வீண் செலவுகளை அகற்றுதல்.

v. வெளிப்புறக் கணக்காய்வாளர்களுடன் தொடர்பு கொள்வதோடு கணக்காளர் நாயகத்தின் அல்லது வெளிப்புற கணக்காய்வாளர்களின் முகாமைத்துவக் கடிதங்களைப் பின்பற்றுதல்.

vi. சட்டங்கள், ஒழுங்குமுறைகள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் பொருந்தியுள்ளதா என்பதை உறுதிப்படுத்துதல்.

vii. கணக்கியல் தரநிலைகளுடனான இணக்கத்தை உறுதிப்படுத்த நிதி அறிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்.

viii. உள்ளகக் கணக்காய்வு அல்லது வெளிப்புறக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் தீர்வு நடவடிக்கைகளுக்கான முகாமைத்துவக் கடிதங்கள் என்பவற்றை மதிப்பாய்வு செய்தல்.

ix. பொது நிறுவன செயற்குழுக்களின் வழங்கப்படும் பரிந்துரைகள்/ வழிகாட்டுதல்களை செயற்படுத்துவதை மதிப்பாய்வு செய்தல்.

x. வருடாந்த அறிக்கையில் சேர்த்துக் கொள்வதற்காக குழுவினால் கண்டறியப்பட்ட விடயங்களிற்கான அறிக்கையை தயாரித்தல்.

3. கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள்

ஜனாதிபதி தேர்தலின் காரணமாக 2019 காலப்பகுதிக்கான கணக்காய்வுக் குழுவின் சேவைக் காலம் 2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முதல் முடிவுக்கு வந்தது. இக் காலப்பகுதியில் பின்வரும் குழு உறுப்பினர்கள் தமது பணிகளை வழங்கியிருந்தனர்.

உறுப்பினரின் பெயர்	பதவி மற்றும் தகுதி
(அ). பேரவையினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்	
1. திரு. ஏ. ஞானதாசன் (தலைவர்)	ஜனாதிபதி ஆலோசகர்/ ஓய்வு பெற்ற மேலதிக பொது வழக்குறைஞர்
2. வைத்தியக் கலாநிதி. எச் ஆர் தம்பவிட	அறுவை சிகிச்சை ஆலோசகர், போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு
3. திரு. எஸ். சண்முகம்	வழக்கறிஞர் மற்றும் முன்னாள் அரசாங்க அதிபர்
(ஆ). முன்னாள் பதவிமுறை உறுப்பினர்கள்	
4. திரு. ஏ. பகிரதன்	பதில் பதிவாளர்
5. திரு. எஸ். திருவருட்செல்வன்	சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்
(இ). பார்வையாளர்கள்	
6. திரு. கே ரவீந்திரன்	பதில் கணக்காய்வு மேற்பார்வையாளர் (கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை), கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
7. திரு. எம் எம் ஜே ஆர் பொகமுவ	உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
(ஈ). அழைப்பாளர்கள்	
8. திரு. எம். எம். பரீஸ்	நிதியாளர் / கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

4. கூட்டங்கள்

நாட்டின் நிச்சயமற்ற நிலமை காரணமாக, இவ் ஆண்டு குழுவானது மூன்று தடவைகளே கூடியுள்ளது. இக் குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள், அனுமதிக்காகவும் தேவையான மேலதிக நடவடிக்கைகளுக்காகவும் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இவ் ஆண்டு நடைபெற்ற கூட்டங்களின் விபரங்கள் கீழ்வருமாறு;

இல	கூட்ட இலக்கம்	திகதி
1	62வது கணக்காய்வுக் குழுக் கூட்டம்	21.03.2019
2	63வது கணக்காய்வுக் குழுக் கூட்டம்	22.06.2019
3	64வது கணக்காய்வுக் குழுக் கூட்டம்	29.11.2019

5. ஆண்டிற்கான செயற்பாடுகள்:

இவ் ஆண்டு மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட குழுவின் நடவடிக்கைகள் பின்வருமாறு.

அ. உள்ளகக் கணக்காய்வு:

- *உள்ளக கணக்காய்வுத் திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தை சிபாரிசு செய்தல் மற்றும் கண்காணித்தல்*

  முந்தைய அனுபவத்தின் அடிப்படையில், கணக்காய்வு திட்டங்களில் பின்வரும் சில சோதனைப் பகுதிகளில் அதிக கவனத்தைச் செலுத்துவாற்கு குழு பரிந்துரைத்திருந்தது.

  - கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம்

- செயலற்ற சொத்துக்கள்
- கட்டுமானக் கொடுப்பனவுகள்
- மேலதிக நேரக் கொடுப்பனவுகள்
- வாகன பழுதுபார்ப்புகள் மற்றும் பராமரிப்புக்கள்
- ஆண்டுக்கான சரிபார்ப்பு
- தனிப்பட்ட கோப்புக்கள்
- கொள்வனவு மற்றும் வங்கி கணக்கிகக்கக் கூற்று

மேலும், இவ் குழுவானது ஆண்டு முழுவதற்குமான அதன் நிலையைக் கண்காணித்தது.

- *உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்.*
  இக் குழுவானது உள்ளகக் கணக்காய்வாளரின் அறிக்கைகள், குறிப்புக்கள் மற்றும் வினவல்கள் என்பவற்றை மதிப்பாய்வு செய்ததுடன் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு நிர்வாகத்திற்குத் தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகளையும் வழங்கியிருந்தது.

ஆ. வருடாந்த அறிக்கை மற்றும் வருடாந்த கணக்குகள்:

குழுவானது குறித்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையினைத் தயாரித்தலில் முன்னேற்றத்தினை ஏற்படுத்துதல் தொடர்பாக பரிசீலனை செய்தது மற்றும் சரியான நேரத்திற்கு சமர்ப்பிப்பது தொடர்பிலும் உறுதிப்படுத்தியது. மேலும், பல்கலைக்கழகத்தின் வருடாந்த கணக்கறிக்கை தயாரித்தல் தொடர்பிலும் தொடர்ந்து பரிசீலனை மேற்கொண்டது.

இ. வெளிப்புற கணக்காய்வு:

கணக்காய்வு வினாக்கள் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு இணங்க வெளிப்புற கணக்காய்வாளர்களினால் ஆண்டு முழுவதும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த அறிக்கை என்பவற்றை குழு மதிப்பாய்வு செய்தது.

ஈ. உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு:

- *வருடாந்த சரிபார்ப்பு மற்றும் நிலையான சொத்து பதிவு*
  பல்கலைக்கழகத்தின் வருடாந்த கணக்கெடுப்பு ஆய்வினை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதிலுள்ள முன்னேற்றத்தை குழுவானது தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்து கண்காணிப்பு செய்தது. மேலும், நிலையான சொத்துப் பதிவேட்டினை (மென்பொருளினை) பூர்த்தி செய்தல் தொடர்பில் கண்காணித்ததோடு தேவையான அறிவுரைகளையும் வழங்கியது.

- *தீர்க்கப்படாத முற்கொடுப்பனவுகள் மற்றும் கடன்களை அறவிடல்*

  கடன் மற்றும் முற்கொடுப்பனவுகளை அறவிடல் செயல்முறை தொடர்பில் குழுவானது முக்கிய கவனம் செலுத்தியிருந்ததுடன் மதிப்பீட்டு ஆண்டு முழுவதும் திருப்பிச் செலுத்தும் நடவடிக்கைகளை உன்னிப்பாக கண்காணித்தது.

- *ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் கொடுப்பனவுகளைச் வெலுத்தல்*

  இக் குழுவானது மேற்கூறியவற்றை வலியுறுத்தியதுடன், ஆராய்ச்சி மானியத்தைப் பெற்றுக் கொண்ட ஊழியர்களின் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் தொடர்பான முன்னேற்றங்களையும் கண்காணித்தது.

உ. பெருநிறுவனத் திட்டம் மற்றும் முதன்மைத்திட்டம்

பெருநிறுவனத் திட்டம்

பொது நிர்வாகத்தின் நல்லாட்சியின் வழிகாட்டுதலில் வரையறுக்கப்பட்ட தர நிலைப்படி, பெருநிறுவனத் திட்டம் தயாரக்கப்படுவதற்கான முன்னேற்றத்தை குழுவானது தொடர்ந்து ஆய்வு செய்து கண்காணித்து வருகிறது.

ஊ. காணி உரிமம்:

பெருந்திட்டம்

EUSL க்கு சொந்தமான பெரும்பாலான காணிகள் தலைப்புப் பத்திரம் அல்லது உரிமங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதை குழு கண்டறிந்தது. மேலும் குழு இது தொடர்பில் தீவிர கவனம் செலுத்தியதுடன் அந்த நிலப்பகுதிகளுக்கான உரிமங்கள் அல்லது தலைப்புப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பேரவைக்கு பரிந்துரை செய்தது. இதன் விளைவாக இந்த விடயத்தை கையாழ்வதற்காக ஓர் ஆலோசகர் நியமிக்கப்பட்டதோடு மேலும் இப்போது இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் உள்ள சில நிலப்பரப்புகளிற்கு தலைப்புப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதில் சில சாதகமான முன்னேற்றத்தை பெறக்கூடியதாக உள்ளது. மேலும் கணக்காய்வுக் குழு இதன் முன்னேற்றங்களை தொடர்ந்து கண்காணிக்கிறது

எ. ஒப்பந்தப் பத்திரம் மற்றும் உடன்படிக்கை மீறல்

19.01.2019 அன்று நடைபெற்ற 265ஆவது மூதவைக் கூட்டத்தில் மூதவையினால், பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வுச் சுற்றறிக்கை இல: 02/2018 இன் படி நியமிக்கப்பட்ட பிணை மீட்பு மீளாய்வுக் குழுவை இக் குழுவானது மதிப்பாய்வு செய்து தொடர்ந்து கண்காணித்தது. மேலும் இவ் விடயத்தை கையாள சட்ட அதிகாரி நியமிக்கப்பட்டார். இதன் விளைவாக பிணை மீறிய சிலரிடம் இருந்து சாதகமான பதில்கள் பெறப்பட்டன. சட்ட ஆலோசகர் மூலமாக கோரிக்கைக் கடிதத்தை பிணையாளர்களுக்கு அனுப்புவதற்கான சட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏ. வரவு செலவு திட்டக் கட்டுப்பாடு

முறையான நிதி கட்டுப்பாடு மற்றும் அதன் வழங்கலை உறுதி செய்வதற்கான வரவுசெலவுத் திட்ட விதிகளுக்கு எதிரான உண்மையான செயற்திறனை குழு தீவிரமாக கவனித்தது.

ஐ. பொது நிறுவனங்களுக்கான குழுவின் கூட்டம்

இந்தக் குழு பொது நிறுவனங்களுக்கான செயற்குழுவின் கூட்ட அறிக்கைகள் குறித்து விவாதித்ததுடன் பொது நிறுவனங்களுக்கான செயற்குழு குறிபிட்ட விடயங்களில் தீவிர அக்கறை கொண்டிருந்தது. பொது நிறுவனங்களுக்கான செயற்குழுவின் நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் தொடர் நடவடிக்கைகளில் எமது குழு கவனத்தினை செலுத்தியிருந்ததுடன் சில சிக்கல்களைத் தீர்க்க பல்கலைக்கழக நிர்வாகத்திற்குத் தேவையான வழிகாட்டுதல்களையும் வழங்கியிருந்தது.

6. முடிவுரை:

கணக்காய்வுக் குழு உறுப்பினர்களின் செயல்திறனான பங்களிப்பு மற்றும் பல்கலைக்கழகத்தின் நல்லாட்சி நோக்கிய அவர்களின் அர்ப்பணிப்பு என்பவற்றில் குழு திருப்பி அடைந்தது. குழுவின் செயலாளராக தனது பங்கினை நிறைவேற்றிய சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளரின் செயற்பாடுகளில் குழு திருப்பி அடைந்துள்ளது. குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அடையப்பட்ட முன்னேற்றங்களில் குழு திருப்பியடைந்துள்ளதோடு நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை, சரியான நிதியியல், நிர்வாக மற்றும் கல்விசார் செயல்திறன் ஆகியவற்றை செயல்படுத்துவதை தொடர்ந்தும் வலியுறுத்துகிறது.

தலைவர்,
கணக்காய்வு குழு
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

6 இலங்கையின் கிழக்கு பல்கலைக்கழகத்தினால் அமுல்படுத்தப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்கு அறிக்கை

இலக்கு	சுட்டி	செயற்பாடுகள்	நிலை	கணிப்பு
இலக்கு 4: யாவரையும் உள்ளடக்கிய, சமவாய்ப்புள்ள, சமத்துவமான, தரமான கல்வியை உறுதிப்படுத்துதல், மற்றும் எல்லோருக்கும் வாழ்நாள் முழுதுமான கல்வி கற்றலுக்கான வாய்ப்பை ஊக்குவித்தல்	**சுட்டி 4.2.2:** ஒழுங்கமைக்கப்பட்ட கற்றலில் பங்கேற்பு விகிதம் (உத்தியோகபூர்வ முதன்மை நுழைவு வயதுக்கு ஒரு வருடத்திற்கு முன்), பாலினம் தொடர்பானது	**மூலோபாய திட்டத்தின் இலக்கு 1 இன் குறிக்கோள்கள்:** 1.1 தரம் மற்றும் பொருத்தத்தை மேம்படுத்த குறிப்பிட்ட கால இடைவெளியில் பாடத்திட்டங்களை மீளாய்வுசெய்தல் 1.2 கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டு உத்திகளை மேம்படுத்துதல் 1.3 சந்தைத் தேவை மற்றும் எதிர்கால போக்குகளின் அடிப்படையில் புதிய ஆய்வு திட்டங்களை அறிமுகப்படுத்துதல் 1.4 கற்பித்தல் மற்றும் கற்றல் சூழலை மேம்படுத்துதல்	உள்ளக தர கண்காணிப்பு முறைமை மூலம் செயல்படுத்தப்படுகிறது	
	சுட்டி 4.4.1: திறன்களின் வகைகளின் அடிப்படையில் தகவல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் (ICT) திறன்களுடன் இளைஞர் மற்றும் பெரியவர்களின் விகிதாசாரம்			
	சுட்டி 4.a.1: பின்வரும் விடயங்களுக்கான அணுகல் உள்ள கல்விக்கூடங்களின் விகிதாசாரம்:			
	(ஆ). கல்வி நோக்கங்களுக்காக இணையம்	அனைத்து மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் உள்ளக வலையமைப்பு (LAN) மற்றும் Wi-Fi மூலம் இணைய இணைப்பை (LMS) வழங்கல்	அனைவருக்கும் கிடைக்கிறது	அதிவேக பயன்பாட்டை வழங்க திட்டமிட்டுள்ளது
	(இ). கல்வி நோக்கங்களுக்காக கணினிகள்	ஒவ்வொரு விரிவுரை மண்டபத்திற்கும் இணையப் (LMS) பயன்பாட்டுடன் கணினிகளை வழங்கல்		
	(ஈ). மாற்றுத் திறனாளி மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள்	மாற்றுத்திறன் மாணவர்களுக்கான அனுகும் வசதிகளை வழங்குதல்	பழைய கட்டிடங்களில் 50% நிறைவடைந்துள்ளது	அனைத்து எதிர்கால கட்டுமானங்களுக்கும் திட்டமிடப்பட்டுள்ளது
	(உ). அடிப்படை குடிநீர் வசதி		அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது	
	(ஊ). ஒற்றை பாலின அடிப்படை சுகாதார வசதிகள்		அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது	

இலக்கு	சுட்டி	செயற்பாடுகள்	நிலை	கணிப்பு
இலக்கு 5: பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் சிறுமியர்களுக்குமான அதிகாரம்	**சுட்டி 5.1.1:** பாலின அடிப்படையில் சமத்துவம் மற்றும் பாகுபாடு காட்டாமலிருப்பதை ஊக்குவிக்கவும், செயல்படுத்தவும், கண்காணிக்கவும் சட்ட ரீதியான கட்டமைப்புகள் காணப்படுகின்றதா இல்லையா	அக்டோபர் 2015 இல் நிறுவப்பட்ட பாலின சமத்துவம் மற்றும் சமபங்கு (GEE) பகுதி மூலம் பிரச்சனைகளை ஆராய்தல்	GEE பகுதி மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு பீடங்களின் மட்டத்தில் செயல்படுகிறது	
	சுட்டி 5.2.1: முந்தைய 12 மாதங்களில் தற்போதைய அல்லது முன்னாள் நெருங்கிய கூட்டாளரால் வன்முறை வடிவம் மற்றும் வயது ஆகியவற்றால் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்கள் மற்றும் பெண்கள் உடல், பாலியல் அல்லது உளவியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.			
இலக்கு 6: நிலையான முகாமைத்துவம் மூலம எல்லோருக்கும் நீர் மற்றும் சுகாதாரம் கிடைப்பதை உறுதிசெய்தல்	**சுட்டி 6.1.1:** பாதுகாப்பாக நிர்வகிக்கப்படும் குடிநீர் சேவைகளைப் பயன்படுத்தும் மக்கள்தொகை விகிதம்	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபையினால் வழங்கப்படும் சுத்தமான குடிநீர் வழங்கல்	அனைத்து பல்கலைக்கழக சமூகங்களுக்கும் சுத்தமான குடிநீர் வழங்கப்படுகிறது	
		விடுதிகளுகான நீர் சுத்திகரிப்பு ஆலை கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது	ICT தயாரித்த திட்ட முன்மொழிவை UGC க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	இந்த திட்டம் 70% அடங்கும்.
இலக்கு 7: அனைவருக்கும் மலிவானதும், நம்பகமானதும் நிலையானதுமான நவீன சக்தி வலு (எரிசக்தி) கிடைப்பதை உறுதிசெய்தல்	**சுட்டி 7.1.1:** மக்கள் தொகை விகிதாசாரத்திற்கேற்ப (புதுப்பிக்கத்தக்க) மின்சாரம் இலகுவாகக் கிடைத்தல்	சௌட் தொகுதிக்கான சோலார் நெட் மீட்டரிங் அமைப்பு நிறுவப்பட்டது (ஆறு ஆண்டுகளில் செலவை ஈடுசெய்யும்) கார்பன் பாத அச்சு (ஆண்டுக்கு 127.88 மெட்ரிக் தொன்)	ஜூலை 2018 முதல் மின்சாரத்தை உருவாக்குங்கள் (மொத்தமாக உருவாக்கப்பட்ட அலகுகள் 212,000 அலகுகள்), இது கட்டிடத்தின் நுகர்வுகளில் 50% மற்றும் மொத்த நுகர்வுகளில் 10% ஆகும்.	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையம் மற்றும் மாணவர் விடுதிகளுக்கு நிறுவ திட்டமிட்டுள்ளது, இது மொத்த நுகர்வுகளில் 50% க்கும் அதிகமாக இருக்கும்.

7 இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின், 2019 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக்கூற்றுகள்

1.1 முனைப்பழியான அபிப்பிராயம்

இலங்கையின் கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 107 (5) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழக அதிகார சட்டத்தின் பிரிவு 108 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டு அறிக்கையுடன் சேர்த்து வெளியிடப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியான அபிப்பிராய கருத்தின் அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகள் தவிர இலங்கையின் கிழக்கு பல்கலைக்கழகத்தின் 31 டிசம்பர் 2019 உடன் முடிவடைந்த ஆண்டில் உள்ளவாறான நிதிநிலையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியான அபிப்பிராயத்தின் அடிப்படைகள்

(அ) மீளாய்வாண்டின் 31 டிசம்பரில் முற்றிலுமாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட ரூ 468,015,255 பெறுமதியான 20வகை ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பனவை இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியம் - 07 இன் பத்தி 42 (டி) கீழ் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை. அதேபோல தவறாக மதிப்பீடு செய்யப்பட்ட மேற்படி சொத்துகளின் பாவனைக்காலம் இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமம் - 03ன் படி சரிசெய்யப்படவில்லை என்பதுடன் காட்டப்பட்ட சொத்துகளின் உண்மை பெறுமதி நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம பிரிவு 72 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் ஒன்றாக கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அவை தனித்தனியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். இருப்பினும், 31 டிசம்பர் 2019 உள்ளவாறான பல்கலைக்கழகத்தின் காணி மற்றும் கட்டிடங்களின் திரட்டிய பெறுமதியாக ரூ. 1,707 மில்லியன் என நிதிகூற்றுகளில் ஒன்றாக காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றின் கீழ் காட்டப்பட்ட பெறுமானத் தேய்வுக்கான செலவு ரூ 14,704,390. இப் பெறுமானத் தேய்வுக்கான செலவானது நிதிச் செயல்திறன் கூற்றில் ரூ 64,735,341 என பதிவிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூ 50,030,095 என கூட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மொத்த காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ள மொத்த காசு மற்றும் காசிற்கு சமமான இருப்பு ரூ 526,283,741. இதுதொடர்பில் ரூ. 3,048,236, பெறுமதியான காசு மற்றும் காசிற்கு சமமான தொகைக்குரிய ஆதாரங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

(உ) ரூ 504,574,803 இழப்பீடு கோரி பல்கலைக்கழகத்துக்கு எதிராக பல்வேறு தரப்பினராலும் நீதிமன்றுகளில் தாக்கல் செய்யப்பட்ட பதின்மூன்று வழக்குகள் இருந்தபோதும், இதுதொடர்பான தொடர்ந்து செல்லும் பொறுப்புகள் எதுவும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம் பிரிவு 8 இன் பிரகாரம் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப (SLAuSs) நான் எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழ் எனது பொறுப்புகள் நிதிநிலை அறிக்கைகளின் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புகள் எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. எனது கணக்காய்வு அப்பிப்பிராயத்துக்கான ஒரு அடிப்படையை வழங்க நான் பெற்ற சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நம்பகமானதுமான நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவமே பொறுப்பாவதுடன் நியாயமான பார்வை, மற்றும் முகாமைத்துவ தீர்மானம் உள்ளக கட்டுப்பாடு போன்றவற்றை செயல்படுத்துவதற்கு அவசியமான நிதி அறிக்கைகளை மோசடி அல்லது பிழை, பொருள் தவறான விளக்கத்திலிருந்து விடுபட தயாரித்தல் வேண்டுமே தவிர. முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைக்கும் உள்நோக்கத்தொடோ, அல்லது நடவடிக்கைகளை நிறுத்த எண்ணுவதோ அல்லது யதார்த்தமற்ற மாற்றுவழிகளை செய்யவோ முடியாது.

பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரே பல்கலைக்கழக நிதி அறிக்கை தொடர்பான செயற்பாட்டினை மேற்பார்வையிடுவதற்குப் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 16 (1) இன் படி பல்கலைக்கழகமானது அதன் அனைத்து வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் சரியான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றை பராமரிக்கவும், வருடாந்த மற்றும் குறிப்பிட்ட கால நிதிகூற்றுக்களை தயாரிக்கப்பதற்கும் பொறுப்பாகும்.

1.4 நிதிகூற்றுகள் மீதான கணக்காய்வில் கணக்காய்வாளரின் பொறுப்புகள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது என்பவை எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

- என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்து கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல். அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- பல்கலைக்கழத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின்

பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

2. ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் பின்வரும் பின்வரும் தேவைப்பாடுகள் வெளிப்படுத்துகின்றது.

- முனைப்பழியான அபிப்பிராயத்தின் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவு தவிர, தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நான் கனக்காயவுக்காக பெற்றுள்ளதுடன் எனது பரீட்சிப்பில் இருந்து 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 இன் படி சரியான கணக்கியல் பதிவுகள் பல்கலைக்கழகத்தால் வைக்கப்பட்டுள்ளது என்பதும்.

- 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (iii) இன் தேவைபாட்டின்படி சமர்ப்பிக்கபட்ட நிதிநிலை அறிக்கைகள் முந்தைய ஆண்டுடன் ஒத்துப்போகின்றன என்பதும்.

- ஆம் 2018 ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (iv) இன் தேவைக்கேற்ப சமர்ப்பிக்கபட்ட நிதிநிலை அறிக்கைகளில் முந்தைய ஆண்டு நான் செய்த அனைத்து பரிந்துரைகளும் முனைப்பழியான அபிப்பிராயத்தின் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்கள் தவிர உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதும்.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (ஈ) இன் தேவைக்கேற்ப பல்கலைக்கழகத்தின் ஆளும் அதிகாரசபையின் எந்தவொரு உறுப்பினருக்கும் பல்கலைக்கழகத்தால் உள்ளிடப்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்திலும் நேரடி அல்லது மறைமுகமாக ஏதேனும் அக்கறை கொண்டுள்ளாரா என்பதும்.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (ஊ) இன் தேவைக்கேற்ப இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய

பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் இணங்கியிருந்தது என்பதும்.

	சட்டம் தொடர்பான /அறிவுறுத்தல்	விபரம்
அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணங்கள்.	
	நிதி பிரமாணம் 757 (2)	மதிப்பாய்வு ஆண்டிற்கான மெய்ம்மையாய்வு அறிக்கை 2020 ஜூன் 30 வரை கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்கப்படவில்லை.
ஆ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை	
	ஜூலை 10, 2017 திகதியிட்ட பல்கலைக்கழக மானிய ஆணைகுழு சுற்றறிக்கை இல 10/2017 இன் அத்தியாயம் XX மற்றும் சுற்றறிக்கை கடிதங்களின் பிரிவு 3 (1)	மதிப்பாய்வு ஆண்டில் பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்களுக்கு அவர்களின் வருகை மற்றும் செல்கை உறுதிப்படுத்தப்படாமல் ரூ. 748 மில்லியன் வேதனமாக வழங்கப்பட்டது.
இ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நவம்பர் 17, 2015 திகதியிடப்பட்ட தாபன சுற்றறிக்கை இல 15/2015	உள்வாரி மாணவர்களுக்காக நடத்தப்படும் பரீட்சைகளின் முடிவுகள் 03 மாதங்களுக்குள் வெளியிடப்பட வேண்டும். இருப்பினும், 2014/2015 முதல் 2017/2018 வரையிலான கல்வி ஆண்டுகளில் நடத்தப்பட்ட பரீட்சைகளின் முடிவுகள் 01 முதல் 10 மாதங்கள் தாமதமான பின்னர் வெளியிடப்பட்டுள்ளன. இந்த நடைமுறை மாணவர்களின் வேலை வாய்ப்புகளை பாதித்தது.
ஈ)	டிசம்பர் 19, 1978 திகதியிட்ட திறைசேரி சுற்றறிக்கை இல. 842	ரூ. 4,309,751,059 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பான நிலையான சொத்து பதிவேடு பேணப்படவில்லை.
உ)	02 ஜூன் 2003 திகதியிட்ட பொது நிறுவன சுற்றறிக்கை எண் PED/12 இன் பிரிவு 6.5.1.	வரைவு ஆண்டு அறிக்கையின் பிரதி வருடாந்த நிதிக்கூற்றுகளுடன் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (எ) இன் தேவைக்கேற்ப இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பது, மற்றும்

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (எ) இன் தேவைக்கேற்ப இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

3. பிற கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) நூலகத்தின் தன்னியக்க நோக்கத்திற்காக பல்கலைக்கழக மானிய ஆணையத்திடமிருந்து பெறப்பட்ட ரூ. 4,500,000, 5 ஆண்டுகளுக்கும் மேலாக குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லை

(ஆ) ரூ. 20 மில்லியன் பெறுமதியான ஒரு கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரம், ஒரு அச்சிடும் இயந்திரம், இரு சக்கர உழவு இயந்திரம் மற்றும் நடமாடும் ஆய்வுகூட வாகனம் என்பன விவசாய பீடத்திற்கு வழங்கப்பட்டபோதும் அவை குறித்த நோக்கத்திற்காக முறையாக பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டுள்ளன.

(இ) ரூ. 3,519,702 பெறுமதியான, 02 முதல் 15 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு நிலுவைவுள்ள கடன் நிலுவைகள், சம்பள முற்பணம், ஒப்பந்த பத்திரக் கடமைகள் மீறல், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறத்தக்கவை என்பவற்றை மீட்க நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளது.

(ஈ) ஜூலை 13, 1988 திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 21 / 88 இன் படி விரிவுரையாளர்களுக்கு கல்விசார் படிக்கொடுப்பனவுகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களைக் கருத்தில் கொள்ளாமல், 2004 முதல் ஜூலை 2020 வரை பயங்கரவாத வன்முறை காரணமாக 2004 ஆம் ஆண்டில் இறந்த விரிவுரையாளரில் தங்கிவாழ்பவர்களுக்கு ரூ 8,640,688 தொகை வழங்கப்பட்டுள்ளது.

(உ) 2004 கல்விசார் பணியாளர்களில் 24 கல்விசார் பணியாளர்கள் மட்டுமே கூட்டிணைந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். 11 ஆராய்ச்சிகள் ஆராய்ச்சிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு மானியங்களை செலுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டபோதும், திட்டமிடப்பட்ட காலத்தில் இரண்டு ஆராய்ச்சி திட்டங்கள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மொத்தமாக ஒதுக்கப்பட்ட மானியமான ரூ. 11,244,372வில் 58 சதவீத மானியமான ரூ. 6,851,466 மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் கல்விசார் பணியாளர்களுக்கு 284 அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்கள் இருந்த அதே வேளை, கல்விசார் பணியாளர்களின் உண்மையான எண்ணிக்கை 217 ஆக இருந்தது. காலியிடங்களின் எண்ணிக்கை 67 ஆக இருந்தபோதும் அதில் 14 வெற்றிடங்கள் மூத்த பேராசிரியர் பதவிகளுக்குரியவை. கல்விசாரா பணியாளர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 93 ஆகும். இந்த நிலைமை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை பாதித்திருந்தும்கூட, பல்கலைக்கழகம் 2020 ஜூலை 27 வரை இவ் வெற்றிடங்களை நிரப்பவில்லை.

W.P.C. விக்கிரமரெட்ண

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

8 இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2019 மார்கழி 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் மீது 1978 ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1)ஆம் உப பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் பதிலளிப்பு

சார்பு இல.		கணக்காய்வு பத்தியின் மேற்கோள்கள்	முகாமைத்துவ பதிலளிப்பு
1.		நிதிக்கூற்றுகள்	
	1.1	முனைப்பழியான அபிப்பிராயம்	
	1.2	முனைப்பழியான அபிப்பிராயத்தின் அடிப்படைகள்	
	அ)	மீளாய்வாண்டின் 31 டிசம்பரில் முற்றிலுமாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட ரூ. 468,015,255 பெறுமதியான 20 வகை ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பனவை இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியம - 07 இன் பத்தி 42 (டி) கீழ் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வில்லை. அதேபோல தவறாக மதிப்பீடு செய்யப்பட்ட மேற்படி சொத்துகளின் பாவனைக்காலம் இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமம் - 03ன் படி சரிசெய்யப்படவில்லை என்பதுடன் காட்டப்பட்ட சொத்துகளின் உண்மை பெறுமதி நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை.	ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 07 ன் பிரகாரம் மறுமதிப்பீடு தொடர்பான செயல்முறைக்கு நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது
	ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம பிரிவு 72 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் ஒன்றாக கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அவை தனித்தனியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். இருப்பினும், 31 டிசம்பர் 2019 உள்ளவாறான பல்கலைக்கழகத்தின் காணி மற்றும் கட்டிடங்களின் திரட்டிய பெறுமதியாக ரூ. 1,707 மில்லியன் என நிதிகூற்றுகளில் ஒன்றாக காட்டப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கிழக்கு பல்கலைகழகத்துக்கு உரித்தான காணிகளின் உரிமையைப் பெறுதல் மற்றும் கட்டிடங்களின் மறுமதிப்பீடு தொடர்பான செயல் முறை செயற்பாட்டில் உள்ளது. செயல்முறை முடிந்ததும், மதிப்பிடப்பட்ட தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 07 இன் படி நிதிகூற்றுக்களில் தனித்தனியாக வெளியிடப்படும்.
	இ)	மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றின் கீழ் காட்டப்பட்ட பெறுமானத் தேய்வுக்கான செலவு ரூ 14,704,390. இப் பெறுமானத் தேய்வுக்கான செலவானது நிதிச் செயல்திறன் கூற்றில் ரூ 64,735,341 என பதிவிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூ 50,030,095 என கூட்டிக்காட்டப்பட்டுள்ளது.	ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இது கடந்த ஆண்டு பெறுமானத் தேய்வுக்கான சீராக்கங்களின் போது ஏற்பட்டதாகும்.
	ஈ)	மொத்த காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ள மொத்த காசு மற்றும் காசிற்கு சமமான இருப்பு ரூ 526,283,741. இதுதொடர்பில் ரூ. 3,048,236, பெறுமதியான காசு மற்றும் காசிற்கு சமமான தொகைக்குரிய ஆதாரங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.	ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவை 2011இலிருந்து தகுதிவாய்ந்த அதிகாரியால் (பேரவைக்கு பதிலாக) மூடப்பட்ட 11 வங்கி கணக்குகள் சார்பாக முன்கொண்டு வரப்பட்ட நிலுவையாகும். பல்வேறு இடங்களில் பல்வேறு நடவடிக்கைகளுக்காக பதினொரு வங்கிக் கணக்குகள் இயக்கப்பட்டன. மேலும் கட்டுப்பாடு மற்றும் வெளிப்படைத் தன்மையைக் கொண்டிருப்பதற்காக தகுதிவாய்ந்த அதிகாரியால் அனைத்து கணக்குகளும் ஒரே கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும் என்று கோரப்பட்டது.

<table>
<tr><th colspan="2">சார்பு இல.</th><th>கணக்காய்வு பத்தியின் மேற்கோள்கள்</th><th>முகாமைத்துவ பதிலளிப்பு</th></tr>
<tr><td></td><td></td><td></td><td>எனவே 2011 ஆம் ஆண்டில் நிதிக் குழுவிற்கு ஒரு சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதன்படி (06.04.2011 அன்று நடைபெற்ற 14 வது நி.கு) அனைத்து வங்கி கணக்குகளும் செங்கலாடி மக்கள் வங்கி கிளை கணக்கிலக்கம் 227-1-001-9-0000-39 க்கு மாற்ற பேரவையின் ஒப்புதலுடன் தீர்மானிக்கப்பட்டது.

காசு புத்தகங்கள் முறையாக புதுப்பிக்கப்படவில்லை என்பதால், 31.03.2011 தேதியின்படி வங்கிகூற்று நிலுவைகளை மாற்ற முடிவு செய்யப்பட்டது.

காசு புத்தகங்களை புதுப்பிக்க முடிவு எடுக்கப்பட்டாலும், தேவையான ஆவணங்களை கண்டுபிடிக்க முடியாத காரணமாக காசு புத்தகத்தை புதுப்பிக்க முடியவில்லை. எனவே, 31.03.2011 படியான காசு புத்தகங்களுக்கும் வங்கிகூற்றுக்கும் இடையிலான வேறுபாடுகள் 2011 முதல் நிதிநிலை அறிக்கைகளில் முன்கொண்டு வரப்படுகின்றன.

நீடித்த கணக்கியல் குறைபாடுகள் தொடர்பான விடயங்களை ஆராய பதிவாளரால் நியமிக்கப்பட்ட குழுவுடன் இந்த குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.</td></tr>
<tr><td></td><td>உ)</td><td>ரூ. 504,574,803 இழப்பீடு கோரி பல்கலைக்-கழகத்துக்கு எதிராக பல்வேறு தரப்பினராலும் நீதிமன்றுகளில் தாக்கல் செய்யப்பட்ட பதின்மூன்று வழக்குகள் இருந்தபோதும், இதுதொடர்பான தொடர்ந்து செல்லும் பொறுப்புகள் எதுவும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம பிரிவு 8 இன் பிரகாரம் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்படு இருக்கவில்லை.</td><td>ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

மேற்படி நியமத்தின்பிரகாரம் இது தொடர்பான சுருக்க விபரம் எதிர்காலத்தில் நிதிக்-கூற்றுகளில் வெளிப்படுத்தப்படும்,</td></tr>
<tr><td>2.</td><td></td><td colspan="2"><table>
<tr><th></th><th>சட்டம் தொடர்பான /அறிவுறுத்தல்</th><th>விபரம்</th><th>முகாமைத்துவ பதிலளிப்பு</th></tr>
<tr><td>அ)</td><td colspan="3">இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணங்கள்.</td></tr>
<tr><td></td><td>நிதி பிரமாணம் 757 (2)</td><td>மதிப்பாய்வு ஆண்டிற்கான மெய்ம்மையாய்வு அறிக்கை 2020 ஜூன் 30 வரை கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்கப்படவில்லை.</td><td>ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

மதிப்பாய்வு ஆண்டிற்கான மெய்ம்மையாய்வு தற்போது முடிவடைந்துள்ளதுடன் அறிக்கை இறுதிசெயப்பட்டதும் அனுப்பிவைக்கப்படும்</td></tr>
</table></td></tr>
</table>

சார்பு இல.	கணக்காய்வு பத்தியின் மேற்கோள்கள்		முகாமைத்துவ பதிலளிப்பு
	ஆ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை	
	ஜூலை 10, 2017 திகதியிட்ட பல்கலைக்கழக மானிய ஆணைகுழு சுற்றறிக்கை இல 10/2017 இன் அத்தியாயம் XX மற்றும் சுற்றறிக்கை கடிதங்களின் பிரிவு 3 (1)	மதிப்பாய்வு ஆண்டில் பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்களுக்கு அவர்களின் வருகை மற்றும் செல்கை உறுதிப்படுத்தப்படாமல் ரூ. 748 மில்லியன் வேதனமாக வழங்கப்பட்டது.	பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கல்வி ஊழியர்கள் தங்கள் வருகையை மற்ற எல்லா பல்கலைக்கழகங்களிலும் பதிவு செய்யும் வழக்கத்தை கொண்டிருக்கவில்லை. இருப்பினும், அனைத்துத் துறைகளும் அந்தந்த துறைகளிலுள்ள வருகை புத்தகத்தில் தமது வருகையை பதிவிடுகின்றனர்.
	இ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நவம்பர் 17, 2015 திகதியிடப்பட்ட தாபன சுற்றறிக்கை இல 15/2015	உள்வாரி மாணவர்களுக்காக நடத்தப்படும் பரீட்சைகளின் முடிவுகள் 03 மாதங்களுக்குள் வெளியிடப்பட வேண்டும். இருப்பினும், 2014/2015 முதல் 2017/2018 வரையிலான கல்வி ஆண்டுகளில் நடத்தப்பட்ட பரீட்சைகளின் முடிவுகள் 01 முதல் 10 மாதங்கள் தாமதமான பின்னர் வெளியிடப்பட்டுள்ளன. இந்த நடைமுறை மாணவர்களின் வேலை வாய்ப்புகளை பாதித்தது.	பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. செயற்திட்ட மீளாய்வு மற்றும் தர உத்தரவாத கையேடு என்பன இரண்டாவது புள்ளியிடல் செயல்முறைக்கு வெளியக பரீட்சகர்களை ஊக்குவிக்கிறது. இந்தத் தேவையைப் பின்பற்ற முயற்சிப்பது பிரதானமாக தாமதத்திற்கு காரணமாக இருந்தது. இது தவிர, இந்த காலகட்டத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு காரணங்களுக்காக பல்கலைக்கழகத்தை மூடுவது போன்ற காரணங்களும் தாமதத்திற்கு காரணமாக இருந்தன.
	ஈ)	டிசம்பர் 19, 1978 திகதியிட்ட திறைசேரி சுற்றறிக்கை இல. 842	ரூ. 4,309,751,059 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பான நிலையான சொத்து பதிவேடு பேணப்பட-வில்லை.	ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இப்போது பல்கலைக்கழகம் ஒரு நிலையான சொத்து பதிவு மென்பொருளைக் கொண்டுள்ளது, மேலும் இதன் வடிகட்டுதல் அமைப்பால் தேவையான தகவல்களை பெறமுடியும்.

சார்பு இல.		கணக்காய்வு பத்தியின் மேற்கோள்கள்	முகாமைத்துவ பதிலளிப்பு
		<table><tr><th></th><th>தொடர்பான சட்டம் / அறிவுறுத்தல்</th><th>விபரம்</th><th></th></tr><tr><td>உ)</td><td>02 ஜூன் 2003 திகதியிட்ட பொது நிறுவன சுற்றறிக்கை எண் PED/12 இன் பிரிவு 6.5.1.</td><td>வரைவு ஆண்டு அறிக்கையின் பிரதி வருடாந்த நிதிக்கூற்றுகளுடன் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.</td><td>ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பெரும்பாலான பணிகள் ஏற்கனவே சரியான நேரத்தில் முடிக்கப்பட்டுள்ளன, இருப்பினும், கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக இறுதி முடிவு தாமதமானது, அது இப்போது நிறை வடைந்துள்ளது.</td></tr></table>	
3.		**பிற கணக்காய்வு அவதானிப்புகள்**	
	அ)	நூலகத்தின் தன்னியக்க நோக்கத்திற்காக பல்கலைக்கழக மானிய ஆணையத்திடமிருந்து பெறப்பட்ட ரூ. 4,500,000, 5 ஆண்டுகளுக்கும் மேலாக குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லை	ஏற்றுக்கொள்ளப்படவில்லை கணக்கீட்டு நியம அங்கீகார அளவுகோல்களின் படி, இது ஒரு மானியமாக அங்கீகரிக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்ட வருமானமாகக் காட்டப்பட்டது. அவை பயன்படுத்தப் பட்டிருந்தாலும், மானியத்தை மாற்றுவதற்கான கணக்கியல் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே மானியத்திலிருந்து செலவினங்கள் தனித் தனியாக அடையாளம் காணப்பட்டவுடன், கணக்கு புத்தகங்களில் இருப்பும், அனைத்து மானியங்களும் ஒன்றாக்கப்பட்டு, மானியத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
	ஆ)	ரூ. 20 மில்லியன் பெறுமதியான ஒரு கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரம், ஒரு அச்சிடும் இயந்திரம், இரு சக்கர உழவு இயந்திரம் மற்றும் நடமாடும் ஆய்வுகூட வாகனம் என்பன விவசாய பீடத்திற்கு வழங்கப்பட்டபோதும் அவை குறித்த நோக்கத்திற்காக முறையாக பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டுள்ளன.	கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திர பிரிவு இது பத்து வருடங்களுக்கும் மேலாக குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டதுடன் சாதனங்களின் பயனுள்ள ஆயுட்காலம் முடிவடைந்திருந்தது. மேலும் அப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் சாதனங்களின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. உபகரணங்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சார்பு இல.		கணக்காய்வு பத்தியின் மேற்கோள்கள்	முகாமைத்துவ பதிலளிப்பு
			அச்சிடும் இயந்திரம்: 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது ஏற்பட்ட சேதத்தின் காரணமாக அச்சிடும் இயந்திரத்தைப் பயன்படுத்த முடியவில்லை. இது உதிரி பாகங்கள் கிடைக்காததால் பழுதுபார்க்க முடியாததுள்ளதுடன் தற்போது இவ் அச்சிடும் இயந்திரம் சந்தையில் காலாவதியாகிவிட்டது. எனவே பொது ஏலத்தின் மூலம் இதனை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. **நடமாடும் ஆய்வுகூட வாகனம்:** நடமாடும் ஆய்வுகூட வாகனம் AHEAD திட்டத்தின் மானியத்தின் கீழ் விஞ்ஞான பீடத்தால் புதுப்பிக்கப்பட்டு ஆராய்ச்சி மற்றும் சமூக நலனுக்காக பயன்படுத்தப்பட உள்ளது. **இரு சக்கர உழவு இயந்திரம்:** இது பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டதுடன் அதன் பயனுள்ள ஆயுட்காலமும் முடிவடைந்திருந்தது. மேலும் இது தற்போது பொறியியல் பட்டறையின் கற்பித்தல் / செய்முறை நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.
	இ)	ரூ. 3,519,702 பெறுமதியான, 02 முதல் 15 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு நிலுவைலுள்ள கடன் நிலுவைகள், சம்பள முற்பணம், ஒப்பந்த பத்திரக் கடமைகள் மீறல், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறத்தக்கவை என்பவற்றை மீட்க நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளது.	ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பெறத்தக்க கடன் நிலுவையை அறவிட பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். • **பணி முடிவுறுத்தப்பட்ட பணியாளர்கள்:** அந்த பணியாளர்கள் இதுவரை தங்கள் பல்கலைக்கழக சேமலாப நிதியை கோரவில்லை. அவர்கள் தமது சேமலாப நிதியை கோரும்பட்சத்தில், தீர்க்கப்படாத கடன்கள் மற்றும் சம்பள முற்பணம் என்பன அவர்களின் ப.க.சே.நிதியிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். • **பதவி வெறிதாக்கப்பட பிணை ஒப்பந்த தொகையை மீள செலுத்தாதவர்கள்:** அந்த பணியாளர்களிடமிருந்து உரிய தொகையைத் தீர்ப்பதற்கு சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, மேலும் அவர்களிடமிருந்து பிணை ஒப்பந்த தொகையை அறவிடும்போது அவர்களின் கடன் நிலுவைத் தொகையும் அறவிடப்படும்.

சார்பு இல.		கணக்காய்வு பத்தியின் மேற்கோள்கள்	முகாமைத்துவ பதிலளிப்பு
			• பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள்: ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு கடிதங்கள் அனுப்புவதன் மூலம் தீர்க்கப்படாத கடன்கள் மற்றும் சம்பள முற்பணம் என்பன முன்கூட்டியே அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்கிடையில், "நிலுவை இல்லை" சான்றிதழை வழங்கிய பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் காண விசாரணை நடந்து வருகிறது, அவர்களிடமிருந்தும் இத்தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். • பிற பல்கலைக்கழகங்கள் / அரசுத் துறைக்கு மாற்றப்பட்ட அதிகாரிகள்: அந்தந்த நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து மாற்றப்பட்ட அதிகாரிகளிடமிருந்து தீர்க்கப்படாத கடன்கள் மற்றும் சம்பள முற்பணம் என்பன முன்கூட்டியே அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. • மேலும், 2005 ஆம் ஆண்டுக்கு முன்னரான ஆவணங்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், 2009க்கு முன்னரான அறியப்படாத குறைபாடுகளைத் தேடுவதாகவும் பேரவை அறிவித்திருந்தது. இவற்றை பதிவளிப்பு செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
	ஈ)	ஜூலை 13, 1988 திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 21 / 88 இன் படி விரிவுரையாளர்களுக்கு கல்விசார் படிக்கொடுப்பனவுகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களைக் கருத்தில் கொள்ளாமல், 2004 முதல் ஜூலை 2020 வரை பயங்கரவாத வன்முறை காரணமாக 2004 ஆம் ஆண்டில் இறந்த விரிவுரையாளரில் தங்கிவாழ்பவர்களுக்கு ரூ 8,640,688 தொகை வழங்கப்பட்டுள்ளது.	பின்னர் திருத்தப்பட்ட 13.07.1988 திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 21/88 இன் படி, இறந்த பணியாளரைச் சார்ந்தவர்களுக்கு அவர் ஓய்வு பெறும் காலம் வரை சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகளை சம்பந்தப்பட்ட திணைக்களம் செலுத்த வேண்டும். மேற்கண்ட விதிகளின்படி, 2004ல் இறந்த பணியாளரைச் சார்ந்தவர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டது.
	உ)	2004 கல்விசார் பணியாளர்களில் 24 கல்விசார் பணியாளர்கள் மட்டுமே கூட்டிணைந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். 11 ஆராய்ச்சிகள் ஆராய்ச்சிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு மானியங்களை செலுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டபோதும், திட்டமிடப்பட்ட காலத்தில் இரண்டு ஆராய்ச்சி திட்டங்கள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மொத்தமாக ஒதுக்கப்பட்ட மானியமான ரூ. 11,244,372வில் 58 சதவீத மானியமான ரூ. 6,851,466 மட்டுமே பயன்படுத்தப்பட்டு உள்ளது.	ஆராய்ச்சி மானியங்களின் முன்னேற்றமானது ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுக் குழுவினால் (ஆர்.பி.சி) கண்காணிக்கப்படுகிறது, மேலும் ஆராய்ச்சியின் தன்மை குறித்த நியாயமான காரணங்களைக் கருத்தில் கொண்டு ஆராய்ச்சி மானியங்களின் காலம் நீட்டிக்கப்பட்டுகிறது. சில ஆராய்ச்சி மானியங்கள் ஒரு வருடத்திற்கும் மேலாகவும் வழங்கப்படுகின்றன.

சார்பு இல.		கணக்காய்வு பத்தியின் மேற்கோள்கள்	முகாமைத்துவ பதிலளிப்பு
			பல்கலைக்கழகத்திலிருந்து ஆராய்ச்சி மானியங்களைப் பெறாமலே பல கல்வியாளர்கள் சர்வதேச புகழ்பெற்ற சர்வதேச குறியீட்டு சாஞ்சிகைகளில் ஆண்டுதோறும் தமது வெளியீடுகளை பிரசுரிக்கின்றனர். சுற்றறிக்கை 05/2018 இன் படி எச்-குறியிட்டு *(h-index)* அடிப்படையில் ஆராய்ச்சியாளர்களை வரிசைப்படுத்தலில் வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. புதுமை மற்றும் வணிகமயமாக்கலுக்கான ஊக்குவிப்பானது பல்கலைக்கழக வணிக இணைப்பு (யுபிஎல்) ஊடாக செய்யப்படுகிறது.
	ஊ)	மீளாய்வாண்டின் இறுதியில் கல்விசார் பணியாளர்களுக்கு 284 அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்கள் இருந்த அதே வேளை, கல்விசார் பணியாளர்களின் உண்மையான எண்ணிக்கை 217 ஆக இருந்தது. காலியிடங்களின் எண்ணிக்கை 67 ஆக இருந்தபோதும் அதில் 14 வெற்றிடங்கள் மூத்த பேராசிரியர் பதவிகளுக்குரியவை. கல்விசாரா பணியாளர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 93 ஆகும். இந்த நிலைமை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை பாதித்திருந்தும்கூட, பல்கலைக்கழகம் 2020 ஜூலை 27 வரை இவ் வெற்றிடங்களை நிரப்பவில்லை.	ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கல்விசார் பதவிகளை நிரப்ப பல சந்தர்ப்பங்களில் விளம்பரம் செய்ய பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. பொருத்தமான விண்ணப்பதாரர்களின் எல்லை ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது (குறிப்பாக சௌக்கிய பராபரிப்பு பீடம்). மேலும், விண்ணப்பங்கள் எதுவும் இல்லாததால் சிரேஷ்ட பேராசிரியர் பணியிடங்களும் வெற்றிடமாக உள்ளன. மேலும் பொருத்தமான வேட்பாளர்கள் இருந்த பணியிடங்களுக்கான நியமனங்களை எங்களால் செய்ய முடிந்தது. வருகை தரும் விரிவுரையாளர்களை நியமிப்பதன் மூலம் இவ் வெற்றிடங்களை நிர்வகித்து வருகிறோம்.
			மேலும் 18.11.2018 அன்று விளம்பரப்படுத்தப்பட்ட பணியிடங்களுக்கான சில நேர்முக தேர்வுகள் (இறுதி தேதி 19.12.2018 அன்று) நிர்வாக மற்றும் கல்விசாரா பணியாளர் கூட்டணியின் தொடர்ச்சியான வேலைநிறுத்தம், ஜனாதிபதித் தேர்தல் 2019 அறிவிப்பு, ஆட்சேர்ப்புகளை தற்காலிகமாக நிறுத்திவைத்தல், முந்தைய பேரவை உறுப்பினர்களின் பதவிதுறப்பு ஆகியவற்றால் நிலுவையில் உள்ளதுடன் தற்போதைய பேரவை உருவாக்கம், பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பு மற்றும் 16.03.2020 முதல் 31.05.2020 வரை முழு நாடும் முடக்கப்பட்டமையால் ஏற்பட்ட உள்ள இடைவெளியும் காரணமாகும். இருப்பினும், மேற்கூறிய காரணங்களை கருத்தில் கொண்டு, 29.07.2020 தேதியிட்ட ப.க.மா.ஆ குழுவின் கடிதத்தின் பிரகாரம் விளம்பரம் செல்லுபடியாகும் காலம் 31.12.2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது, மேற்படி நேர்முக தேர்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

சார்பு இல.		கணக்காய்வு பத்தியின் மேற்கோள்கள்	முகாமைத்துவ பதிலளிப்பு
			மேலும், 29.02.2020 அன்று வெற்றிடமாக உள்ள பணியிடங்களுக்கு மீண்டும் விளம்பரம் செய்ப்பட்டு தொடர்ந்து செயல்முறையிலுள்ளது. கல்விசாரா நியமனம் தொடர்பாக, பின்வரும் விடயங்கள் தரப்படுகிறது.
			• 06.06.2006 தேதியிட்ட ப.க.மா.ஆ குழுவின் சுற்றறிக்கை இல. 876 இன் படி, சிறு பணியாளர் தரங்களுக்கான அனைத்து வெளிப்புற ஆட்சேர்ப்புகளும் (அதாவது: ஏ -13, ஏ -14 மற்றும் ஏ -15 சம்பள அளவைக் கொண்ட பணிகள்) மற்றும் 14 பணியிடங்களும் கல்வி அமைச்சினால் தொகுக்கப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் பட்டியலிலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைகுழு, மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்பவற்றின் ஆட்சேர்ப்பு திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும். • உயர்கல்வி அமைச்சினால் தொகுக்கப்பட்ட விண்ணப்பதாரர் பட்டியல், அந்தந்த நேரங்களில் உயர்கல்வி அமைச்சர்களாக நியமிக்கப்பட்தவர்களால் இடைநீக்கம் செய்யப்பட்டதுடன் இது 2019 ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் மாற்றப்பட்டது. • கீழ்நிலை தரங்களில் உள்ள பணிகளுக்கும், 06.06.2006 தேதியிட்ட ப.க.மா.ஆ குழுவின் சுற்றறிக்கை இல. 876 இல் சேரும் பணிகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்வது தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. • 11.03.2020 திகயிட்ட தேர்தல் ஆணையாளரின் கடிதம் இல EUSL / R / UGC / 199 ஆல் பிற கல்விசாரா பணிகளுக்கான ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டது.

ஒப்பம்: பேராசிரியர் எவ்.சி. றாகல்
உப வேந்தர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்